

Vol.26 | No. 11 | November 2022
The Official Organ of the Diocese of Thuckalay

# இறையருள்



CATECHISM: TEACHERS' SEMINAR, KALLUVILAI, 05.10.2022, STUDENTS' LIFE ORIENTATION CAMP 3,4.10.2022



TENKASI MISSION, ROSARY PROCESSION, 23.10.2022



ST. ALPHONSA COLLEGE, NAAC
ACCREDITATION WITH B++ GRADE, 18.10.2022



SMYM, NITHIRAVILAI AND MANJALUMOODU
FORANES MEET, 16.10.2022 AND 30.10.2022



MARIYAYIN SENAI, ROSARY PROCESSION,
SOOSAIPURAM, 23.10.2022

THE OFFICIAL ORGAN OF THE DIOCESE OF THUCKALAY
VOLUME 26 No :11 NOVEMBER 2022



# இறையருள்
# IRAIARUL

## Editorial Board

Patron

**His Excellency**

**Mar George Rajendran SDB**

Chief Editor

**Fr. Joseph Santhosh**

Associate Editors

**Fr. Thomas Sathianesan**

**Mr. Edwinson**

**Mr. Iyathurai**

**M.R.Merin Sujith**

Published by:

**Fr. Joseph Santhosh**
**Bishop's House**
**Post Box No . 12**
**Thuckalay - 629 175**
**K.K.Dist,Tamil Nadu,India.**

Designed by:

**Jesin J Joseph**

Printed at

**Pulari Offset Press**
**Thuckalay**
**Ph:04651-252570**

## உள்ளே...

| | |
|---|---|
| Bishop's Message | 02 |
| மறைக்கல்வி | 07 |
| குழந்தை ஈசோ இயக்கம் | 10 |
| இளையோர் இயக்கம் (SMYM) | 12 |
| மிஷன் லீக் இயக்கம் | 17 |
| தென்காசி மறைபரப்புதளம் | 18 |
| இல்வாழ்வு இயக்கம் | 19 |
| மரியாயின் சேனை | 23 |
| வின்செென்ட்-தே-பவுல் சபை | 24 |
| புனித அல்போன்சா கல்லூரி | 26 |
| அருட்சகோதரர்களிடமிருந்து | 27 |
| வரவிருக்கும் நிகழ்வுகள் | 28 |
| மறைமாவட்ட செய்திகள் | 29 |
| மறைவட்ட செய்திகள் | 33 |
| MONTHLY AGENDA - OCTOBER 2022 | 42 |
| BISHOP'S ENGAGEMENTS | 44 |

Bishop George Rajendran SDB
Diocese of Thuckalay

Email: bpgeorgerajendran@gmail.com

BISHOP'S HOUSE
P.B. No. 12, Thuckalay P.O.
Kanyakumari District
Tamilnadu – 629175, India
Phone: +91-4651-250633
Diocese Email: thuckalaydiocese@yahoo.com

**Ref. No. Priests/GR/139/2022**
**31 October 2022**

**Dear Readers,**

Greetings and prayerful wishes Bishop's House, Thuckalay!

The entire Catholic Church, except some of the eastern churches, dedicates the month of November to its deceased members. We in our church the remembrance of all Departed Faithful is over served on the last Friday of Denha. Through the offering of Holy Eucharist and performing various forms of prayers, the members of the Catholic Church spend the entire month praying for the eternal repose of their dead. In the Latin Church 2 November is a day specially dedicated for this purpose. On this day, the priests are allowed to celebrate three masses so that they can assist the faithful pastorally in praying for the dead. The faithful, on their part, devoutly attend the holy Eucharist and visit the graves of their beloved, earnestly praying to God to forgive their sins and to take them to His own abode. As we are approaching the month of November, let us reflect upon the reality of death and how as priests we can assist our faithful in their last moments on the earth before they surrender their souls to their creator.

When we think of death, we realise that it happens in time. In the Scriptures, the book of Ecclesiastes speaks of life within a framework of time. It says: "There is a right time for everything" (Ecc. 3:1). It, then, gives us a long list of events for which there is an appropriate time. At the top of the list is this statement: "A time to be born, a time to die" (Ecc. 3:2). This is what confuses us now. We expect everyone to die in their old age. But strangely, we find some dying very young. Such deaths seem to be utterly inappropriate. It violates our sense of order. In our view of life, death and childhood are poles apart, and childhood or adolescents simply does not seem the right time to die - it does not seem to add up. Further, death brings tears. There are many things in life that become so much a part of a home that their absence leaves a void. It may be a picture

that hangs on the wall, a familiar footstep or a cute pet. But nothing becomes as indispensable as a human being. From the outset he/ she tangles his/her tiny fingers in our heart strings and when they are pulled away the hurt is indescribable. It is an hour of heartache, a time of tears. However, as Christians we need to accept this reality with great faith. St Paul speaks of times in life when "we must walk by faith because we cannot walk by sight" (2 Cor 5:7). This is one of those times. There is no way for us to see and think our way through an hour such as we now face. Within the scope of human reason, a tragedy such as this simply does not make sense. Therefore, we either despair or find our strength in faith.

Let us now briefly examine the mystery of death. Of all the fears that plague the heart of man, none is greater than the fear of death. It is our greatest fear, the sum of all other fears. We are afraid to die. We are afraid of what happens when we die. Death is the fundamental human problem.

Life is short and so uncertain. "What is your life? You are a mist that appears for a little while and then vanishes" (James 4:14b). The Psalmist writes: "You sweep men away in the sleep of death; they are like the new grass of the morning-though in the morning it springs up new, by evening it is dry and withered" (Ps 90:5-6). It is sometimes said that nothing is certain in life except death and taxes. But that is not wholly true. A clever man with a good lawyer can find a way around most if not all of his taxes, but no one escapes death. As George Bernard Shaw remarked, "The statistics on death have not changed. One out of one person dies."

Worldwide, there are approximately 56,600,000 deaths each year. That works out to 4.7 million per month, 155,000 per day, 6,500 per hour, 107 per minute, and 1.8 per second. The Greek playwright Sophocles said it this way: "Of all the great wonders, none is greater than man. Only for death can he find no cure."

But then, death is not the end of the story for those who know the Lord. The Bible tells us what lies ahead for those who know Jesus. In 2 Corinthians 5:1, we discover the wonderful truths that give us hope as we face death with all its dark fears. St Paul writes: "Now we know that if the earthly tent we live in is destroyed, we have a building from God, an eternal house in heaven, not built by human hands" (2 Cor 5:1).

Our bodies are like tents. They wear out, they sag, they expand

and they wrinkle. The joints get creaky, the arteries harden, gravity pulls everything downward, the heart slows down, the eyes grow dim, the teeth fall out, the back is stooped, and the arms grow weary. Our bones break and our muscles weaken. The body bulges in the wrong places. We brag about our strength but a tiny microbe can kill us. Sooner or later, we grow old and our bodies begin to break down. Eventually, they stop working altogether.

Hence, we will have to trade in our tent for a building. Think about the difference between a tent and a building. Tents are temporary and flimsy, easily torn, and meant to be replaced. A building is strong, built on a foundation, and not meant to be moved. Someday we will give up our tent and replace it with a building made by God himself. That one fact tells us something important about death.

Hence, for Christians, death is not the end. It is not reincarnation. It is not evaporation. It is not annihilation. Instead, it a trade-in. One day we will trade in our broken down bodies for a new body. Look what St Paul says about that new body. It is from God. It is not made with hands. It is eternal. It is heavenly and not earthly. That is what St Paul meant when he said, “We know.” Lots of things we do not know about the future, but this much is certain. We won’t have to live in tents forever. Someday our “tent” will be replaced with a “building” made by God.

With these reflections on death, let us now as pastors entrusted with the task of leading our people to God, examine how we can assist our people in their moment of death. We need to understand that spiritual and religious support systems are extremely important to people facing death. In the Catholic tradition, the most powerful resources are prayers and rituals, especially the thoughtful celebration of the sacraments. Prayer makes explicit and personal the community’s relationship to dying persons. It brings to consciousness God’s presence and allows patients to express anguish and fear, as well as hope and love.

The Catholic tradition has long affirmed that Sacraments are of great importance in a life of faith; they are a privileged means of heightening our experience with God’s love. The Eucharist is at the heart of the Church’s life as a profound encounter with the Risen Lord. The Sacrament of Reconciliation, which restores harmony with self, others, the environment, and God, can help patients: repair broken relationships, heal the soul, become reintegrated into the community of faith and feel a sense of forgiveness often needed to

face the crisis of dying. The Anointing of the Sick reflects God's compassion to strengthen the body and soul so that the sick will not lose faith or hope but be at peace with God, others, and themselves during their illness.

Further, it must be borne in mind that lack of support for those who have to spend endless hours caring for terminally ill patients is a factor that makes euthanasia an attractive way to bring relief not only to the dying but to those who care for the dying as well. Hence, it is also the duty of pastors to assist not only the dying but also help the care-givers in dealing with the psychological reverberations that they experience while looking after the dying especially those who are terminally ill.

Finally, in our ministry of assisting the dying, terminally ill patients and the care-givers, we need to keep in mind the following principles:

Death can be something that does not just happen to us but that arises from within to bring to fulfilment all that is valuable to us. In this spirit, Catholic healthcare providers and pastors must establish practices to help a patient transform the experience of dying from a mere ending of life to its personal completion.

Suffering is personal and has no objective measurement. The pastors and care givers must make a special effort to pay attention to patients' claims of suffering and provide the medical, social, psychological, and spiritual resources that will help them bear their suffering.

Suffering and death are not absolute evils to be avoided at all costs but can be transformed by identifying with Jesus' suffering, death, and resurrection. We need to include the resources of Christian faith - its stories, symbols, and rituals - in our total care of the dying.

Catholic moral principles regarding the conservation of health and life do not promote physical life as the absolute good to be prolonged 'at any cost.' Catholic healthcare providers should advocate for specific policies that guide us in respecting a patient's limits as to what he/she can accept as beneficial treatment to avoid the burdens of overtreatment or undertreatment.

The moral character of our communities gives true witness to our theological and moral convictions. Through our actions, we must give witness to being a virtuous community of interdependence, care, and hospitality.

The ethos of individualism asserts that independence, not interdependence, is the key to human dignity. As pastors and Catholic healthcare providers, we must ensure we are committed to interdependent partnerships sustained by trust and honesty. We need to be catalysts for collaboration with other communities that care for the dying.

The paradigm of curing has dominated the delivery of healthcare so that caring is reduced to the consolation prize for a cure that could not be attained. The pastors with the help of catholic healthcare providers need to examine their overall style, plan, and goals of treatment to see whether the whole person is being treated and respected.

Hospice care admirably embodies the virtue of hospitality. We must ensure we respect the multiple dimensions of a patient's total good, improve the conditions of dying, and reach beyond a patient to his or her network of support.

As we enter the month of November, let us meaningfully spend the month in helping our people to pray for their dead and in assisting our dying members with whatever consolations that our religion enjoins through the exercise of our priestly prerogatives. It is also an appropriate time for us to reflect upon the temporality of human life and get ourselves of all unnecessary baggage that we carry which can distract from our goal, namely, the heavenly Jerusalem, where moth and rust consume and where thieves break in and steal (Mt 6:19).

As we conclude the month of October, a month during which we honoured our Blessed Mother through the recitation of the Holy Rosary, let us ask her to intercede for all the intentions of our Eparchy. With the celebration of the 26th Foundation Day of our Eparchy coming near, let us now redouble our efforts at building up the kingdom of God with greater commitment and fervour especially in the extended territories of our Eparchy.

With my prayers and blessings,

BISHOP GEORGE RAJENDRAN sdb
Diocese of Thuckalay

Yours in Christ Jesus,

† George Rajendran SDB

Bishop of Thuckalay




"உலகெங்கும் சென்று படைப்பிற்கெல்லாம் நற்செய்தியைப் பறைசாற்றுங்கள்."
(மாற் 16:15)

***"நற்செய்தி அறிவிப்போரின் பாதங்கள் எத்துணை அழகாய் இருக்கின்றன"***
***[உரோமையர் 10:15]***

அனைவருக்கும் அன்பின் நல்வாழ்த்துக்கள்!

## *மறைக்கல்வி ஆசிரியர்களுக்கான ஒருநாள் கருத்தமர்வு*

மறைமாவட்ட மறைக்கல்வி ஆசிரியர்களுக்கான ஒருநாள் கருத்தமர்வு அக்டோபர் 5 புதன் கிழமை அன்று சீனாய் தியான இல்லத்தில் வைத்து காலை 9:45 மணிக்கு குருகுல முதல்வர் பேரருட்தந்தை தோமஸ் பௌவத்துப்பறம்பில் அவர்களின் தலைமையிலும் மார்த்தாண்டம் மறைமாவட்ட மேதகு ஆயர் வின்சென்ட் மார் பவுலோஸ் அவர்கள் மற்றும் ஆவணக்காப்பாளர் பேரருட்தந்தை ஜோஷி குளத்துங்கல், இயக்குநர் அருட்தந்தை அபிலாஷ், இணை இயக்குநர் அருட்தந்தை ஜேக்கப் ஐயம்மாத்திறா அவர்களின் முன்னிலையிலும் நடைபெற்றது. நிகழ்வின் துவக்கமாக பறைக்கோடு மறைக்கல்வி நிலைய ஆசிரியர்கள் இறைவணக்கப்பாடல் பாடினர். தொடக்கமாக குருகுல முதல்வர், கருத்தாளராக வந்திருந்த மேதகு ஆயர் வின்சென்ட் மார் பவுலோஸ் அவர்களையும், அருட்தந்தையர் அருட்சகோதரிகள் ஆசிரியர்கள் அனைவரையும் வாழ்த்தி வரவேற்று உரை நிகழ்த்தினார்

மேதகு ஆயர் வின்சென்ட் மார் பவுலோஸ் அவர்களும் குருகுல முதல்வர் பேரருட்தந்தை தோமஸ் பௌவத்துபறம்பில் ஆவணக்காப்பாளர் பேரருட்தந்தை ஜோஷி மற்றும் இயக்குனர் மற்றும் இணைஇயக்குனர் அருட்தந்தையர்களும் குத்துவிளக்கேற்றி துவங்கி வைத்தனர். ஆயர் வின்சென்ட் மார் பவுலோஸ் அவர்கள் "இன்றைய மாணவர்களின் வாழ்வில் கிறிஸ்துவின் தேவை" என்பது பற்றி மிகத் தெளிவாக ஆசிரியர்களுக்கு எளிதில் புரியும் வண்ணமாக கருத்துக்களை பகிர்ந்து கொண்டார். இறுதியில் வகுப்பு நடத்திய ஆயர் அவர்களுக்கு இயக்குநர் அருட்தந்தை அவர்கள் நன்றி கூறினார். மதியம் 1.00



மணிக்கு அனைவருக்கும் உணவு வழங்கப்பட்டது. பிற்பகல் 1.30 மணிக்கு பள்ளியாடியைச் சேர்ந்த கருத்தாளர் திருமதி ஜாக்குலின் ஆசிரியை அவர்கள் "இறையருளில் வளர மறைக்கல்வி" என்ற கருத்தை மையமாகக் கொண்டு மறைக்கல்வி ஆசிரியர்கள் எல்லாக் காரியங்களிலும் ஈடுபாடு உள்ளவராகவும் ஆசிரியர்கள் மாணவர்களை கவனிக்க வேண்டும் அநீதிக்கு எதிராக குரல் கொடுக்க முன்வரவேண்டும், மாணவர்களின் நம்பிக்கைக்குரியவராக மறைக்கல்வி ஆசிரியர்கள் இருக்க வேண்டும் போன்ற கருத்துக்களை முன்வைத்து, விவிலியப் பகுதிகளை மேற்கோள்காட்டி கருத்துக்களை பகிர்ந்துகொண்டார். இறுதியில் சூசைபுரம் மறைக்கல்வி ஆசிரியை திருமதி ஜெயராணி அவர்கள் வகுப்பு நடத்திய ஆசிரியை திருமதி ஜாக்குலின் அவர்களுக்கும் மற்றும் அனைவருக்கும் நன்றி கூறினார். கருத்தமர்வானது 4.30 மணியளவில் தேனீர் விருந்துடன் இனிதே முடிவுற்றது. இக்கருத்தமர்வில் 475 -க்கு மேற்பட்ட ஆசிரியர்கள் கலந்துகொண்டு பயன்பெற்றனர்.

## *விவிலியக் கலைவிழா: மறைவட்ட எழுத்துப் போட்டிகள்*

2022 - 2023 ஆம் ஆண்டு விவிலியக் கலைவிழாவின் பகுதியான எழுத்துப் போட்டிகள் மறைவட்ட அளவில் அக்டோபர் 16 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணி முதல் 4.30 மணி, 7 மறைவட்ட ஆலயங்களில் வைத்து நடைபெற்றது.

Sub juniors பிரிவு மாணவர்களுக்கு colouring மற்றும் Junior, Senior, Super senior பிரிவு மாணவர்களுக்கு விவிலியத்தை அடிப்படையாகக் கொண்ட ஓவியப் போட்டி கட்டுரை எழுதுதல் மற்றும் கவிதை எழுதுதல் போன்ற போட்டிகள் நடைபெற்றது. பங்களவில் நடைபெற்ற போட்டிகளில் முதலிடம் பெற்ற மாணவர்கள் இப்போட்டிகளில் பங்கு பெற்றனர். போட்டிகள் அனைத்தும் மறைவட்ட இயக்குநர் அருட்தந்தையர்களின் தலைமையில் நடைபெற்றது. எழுத்துப் போட்டிகளுக்குத் தேவையான அனைத்தும் நற்செய்தி நிலைய அலுவலகத்திலிருந்து வழங்கப்பட்டது. இப்போட்டிகளில் 7 மறைவட்ட ஆலயங்களிலுமாக மொத்தம் 535 மாணவர்கள் பங்கு பெற்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## *தலைமையாசிரியர்களின் கூடுகை*

மறைக்கல்வி தலைமை ஆசிரியர்களின் கூட்டம் அக்டோபர் 29 சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு கல்லுவிளை நற்செய்தி நிலைய அலுவலகத்தில் வைத்து இயக்குநர் அருட்தந்தை அபிலாஷ் சேவியர் அவர்களின் தலைமையிலும் இணை இயக்குநர் அவர்களின் முன்னிலையிலும் தூய ஆவிப் பாடலுடன் ஆரம்பமானது. படந்தாலுமூடு தலைமையாசிரியர் அருட்சகோதரி செல்வி SDS அவர்கள் விவிலியம் வாசித்து ஜெபம் செய்தார்கள். தொடர்ந்து அருட்சகோதரி



ட்ரீசா ஜோஸ் FCC அவர்கள் அனைவரையும் வரவேற்று உரையாற்றினார். இயக்குநர் தந்தை அவர்கள் மறைக்கல்வி நிலையங்களில் நிறைவேற்ற வேண்டிய செயல்திட்டங்கள், விவிலிய கலைப் போட்டிகள் பற்றி கூறினார். அன்றைய தினம் விவிலிய கலைவிழா மறைவட்ட அளவிலான எழுத்துப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களின் பெயர் விவரம் வாசிக்கப்பட்டது. இக்கூட்டத்தின் போது முதல் பருவத்தேர்வுக்கான வினாத்தாள் அனைத்து மறைக்கல்வி நிலையங்களுக்கும் வழங்கப்பட்டது. கூட்டத்தில் தலைமை ஆசிரியர்கள் கலந்து கொண்டனர். பரைக்கோடு மறைக்கல்வி தலைமையாசிரியர் அருட்சகோதரி ஜோதிஸ் FCC அவர்களின் நன்றியுரையுடன் நிகழ்வு 4:15 மணிக்கு முடிவுற்றது. இறுதியில் அனைவருக்கும் தேநீர் விருந்து வழங்கப்பட்டது.

## *முதல் பருவத்தேர்வு*

மறைக்கல்வி வகுப்பு 1/2 முதல் 12-ஆம் வகுப்பு வரை உள்ள மாணவர்களின் முதல் பருவத்தேர்வு அக்டோபர் 30 ஞாயிற்றுக்கிழமை அன்று அனைத்து மறைக்கல்வி நிலையங்களிலும் நடைபெற்றது.

**அருட்தந்தை. ஜேக்கப் ஐயம்மாத்ற** — **இணை இயக்குநர்**

**அருட்தந்தை.அபிலாஷ் சேவியர்** — **இயக்குநர்**

| FEASTDAYS OF REV. FATHERS - NOVEMBER - 2022 | |
|---|---|
| Fr. Martin Kandamparampil MST | 11 |
| Fr. Christudas M | 20 |

HOLY CHILDHOOD குழந்தை ஈசோ

# குழந்தை ஈசோ இயக்கம்

***"சிறு பிள்ளைகளை என்னிடம் வர விடுங்கள். அவர்களைத் தடுக்காதீர்கள். ஏனெனில், இறையாட்சி இத்தகையோருக்கே உரியது." [மாற் 10: 14]***

***கருத்தரங்குகள் - குழந்தை ஈசோ இயக்கக் குழந்தைகளுக்கான மறைவட்ட அளவில் கருத்தரங்குகள் நடைபெற்றன.***

### *சூசைபுரம் மறைவட்டம்*

*06.10.2022* அன்று காலை *10* மணிக்கு குழந்தைகளுக்கான கருத்தரங்கு பாலப்பள்ளம் கிறிஸ்து அரசர் ஆலயத்தில் வைத்து நடைபெற்றது. பங்குதந்தை ஜாண்பால் அவர்கள் குழந்தைகளை இயேசுவிடம் கொண்டு வர வேண்டும் என்ற அடிப்படையில் தொடக்கவுரையாற்றி, குத்துவிளக்கேற்றி தொடங்கிவைத்தார் இயக்குநர் தந்தை அவர்கள் குழந்தைகளுக்கு சில நல்ல கருத்துக்களை வழங்கினார். குழந்தைகள் கடவுளைப் புகழும் நோக்கில் சிறு ஜெபங்கள் பயிற்றுவிக்கப்பட்டன. அருட்சகோதரி சிபியா SABS அவர்கள் கடவுளுக்கு எப்போதும் நன்றி சொல்ல வேண்டும் என்று மிகவும் சிறப்பான முறையில் கருத்துரை வழங்கினார். பாலப்பள்ளம் பங்கின் இளைஞர் மெர்சின் அவர்கள் செய்கைப் பாடல் பயிற்றுவித்தார்.

### *படந்தாலுமூடு மறைவட்டம்*

*07.10.2022* அன்று காலை *10.00* மணிக்கு படந்தாலுமூடு மறைவட்ட குழந்தைகளுக்கான கருத்தரங்கு படந்தாலுமூடு திருஇருதய ஆலயத்தில் நடைபெற்றது. பங்குதந்தை தோமஸ் சத்தியநேசன் அவர்கள் தொடக்கவுரையாற்றி தொடங்கி வைத்தார். பினனர் இயக்குநர் தந்தை அவர்கள் இறைவார்த்தைகள் மற்றும் செய்கைப் பாடலை பயிற்றுவித்தார். அருட்சகோதரி பிளஸ்ஸி CMC அவர்கள் குழந்தைகளுக்கு இறைவார்த்தைகள் பயிற்றுவித்து மகிழ்ச்சியடையச் செய்தார்.

### *களியல் மறைவட்டம்*

*06.10. 2022* அன்று மதியம் *2* மணிக்கு களியல் மறைவட்ட குழந்தைகளுக்கான கருத்தரங்கு களியல் புனித மரியன்னை ஆலயத்தில் வைத்து நடைபெற்றது. களியல் மறைவட்ட முதன்மைப் பங்குதந்தை டினு அவர்கள் தொடக்கவுரையாற்றி தொடங்கி வைத்தார். இயக்குநர் தந்தை அவர்கள் குழந்தைகளுக்கு சிறு இறைவார்த்தைகளும், குழந்தைகள் கடவுளுக்கு எப்படி நன்றி சொல்ல வேண்டும் என்றும் பயிற்றுவித்தார்

### நித்திரவிளை மறைவட்டம்

07.10.2022 அன்று மதியம் 2 மணிக்கு நித்திரவிளை மறைவட்டக் குழந்தைகளுக்கானக் கருத்தரங்கானது முஞ்சிறை, புனித ஜார்ஜியார் ஆலயத்தில் வைத்து நடைபெற்றது. மறைக்கல்வி இயக்குநர் மற்றும் பொறுப்பாளர்கள் குத்துவிளக்கேற்றி நிகழ்வைத் தொடங்கி வைத்தனர். அருட்தந்தை அபிலாஷ் அவர்கள் குழந்தைகளுக்கு இறைவார்த்தைகளை பயிற்றுவித்து குழந்தைகள் கடவுளை அன்பு செய்ய வேண்டிய முறையை விளக்கும் முறையில் செய்கைப் பாடலும் பயிற்றுவித்தார். நித்திரவிளை மறைவட்ட பங்குதந்தை ஜோஸ்முட்டத்துப்பாடம் அவர்கள் வருகைதந்து கருத்தரங்கினை சிறப்பித்தார்கள்.

### மஞ்சாலுமூடு மறைவட்டம்

08-10-2022 அன்று 10 மணிக்கு மஞ்சாலுமூடு மறைவட்ட குழந்தைகளுக்கான கருத்தரங்கு மஞ்சாலுமூடு புனித குழந்தை தெரசாள் ஆலயத்தில் வைத்து நடைபெற்றது. மஞ்சாலுமூடு ஆலய பங்குதந்தை அருட்தந்தை அகஸ்டின் தலோடில் அவர்கள் நிகழ்ச்சியை தொடங்கி வைத்தார். இயக்குநர் தந்தை குழந்தைகளுடன் கலந்துரையாடினார். அருட்தந்தை றோபின் அவர்கள் குழந்தைகளுக்கு சிறப்பு வகுப்பு நடத்தினார் 'கடவுள் எவ்வாறு இந்த உலகத்தைப் படைத்தார்' என்பதை சிறுகதைகள் மூலம் சொல்லிக் கொடுத்து, விளையாட்டுகள் மற்றும் பாடல்களை கற்பித்தார்.

### தக்கலை - பிலாங்காலை மறைவட்டம்



08.10.2022 அன்று பிற்பகல் 2 மணிக்கு தக்கலை பிலாங்காலை மறைவட்டக் குழந்தைகளுக்கானக் கருத்தரங்கு காட்டாத்துறை புனித மிக்கேல் அதிதூதர் ஆயத்தில் வைத்து நடைபெற்றது. காட்டாத்துறை பங்குதந்தை மிஜோ புத்தன்புரையில் அவர்கள் குழந்தைகள் இயேசுவிடம் எப்படி ஜெபிக்க வேண்டும் என்றும் அன்பில் எப்படி வளர்வது என்றும் தொடக்கவுரையாற்றி குத்துவிளக்கேற்றி தொடங்கிவைத்தார் செல்வன் மனோஜ் அவர்கள் வகுப்பு நடத்தினர். செய்கைப் பாடல்களும், குழந்தைகளை உற்சாகப்படுத்த சிறுவிளையாட்டுகளும். பயிற்றுவிக்கப்பட்டது.

சிறப்பான முறையில் ஒத்துழைத்த மறைவட்ட பொறுப்பாளர்களுக்கும் ஒவ்வொரு ஆலயத்தின் பொறுப்பாளரும் நன்றி.

இப்படிக்கு
அருட்தந்தை அனில் ராஜ்
இயக்குநர்

YOUTH APOSTOLATE
இளையோர் பணி

சீரோ மலபார் இளையோர் இயக்கம் **SMYM**

## *தொடர் உருவாக்கல் பயிற்சி முகாம்*

தக்கலை மறைமாவட்டம் சீரோ மலபார் இளையோர் இயக்க உறுப்பினர்களுக்கான தொடர் உருவாக்கல் பயிற்சி ஒருநாள் அமர்வு 2022 அக்டோபர் 15 சனிக்கிழமை காலை 10 மணியளவில் ஆரம்பமானது. மறைமாவட்ட இயக்குநர் அருட்தந்தை ஜோசப் சந்தோஷ் வரவேற்பு கூறினார். சமூக ஆர்வலர் திருமதி 'வெளிச்சம்' ஷெரின் அவர்கள் கலந்துகொண்டு “இன்றைய சமூகத்தில் காணப்படுகின்ற பிரச்சனைகள் குறித்தும் அதை மாற்றுவதற்காக நாம் எடுக்க வேண்டிய முடிவுகள் மற்றும் செயல்பாடுகள்” குறித்து பல எடுத்துக்காட்டுகளுடன் வகுப்புகள் நடத்தினார். அதை தொடர்ந்து அக்டோபர் 15 ஞாயிற்றுக்கிழமை நடைபெறுகின்ற நித்திரவிளை மறைவட்ட இளையோர் சந்திப்பிற்கான பயிற்சி வகுப்புகள் இயக்குனர் அருட்தந்தை ஜோசப் சந்தோஷ் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இறுதியில் மறைமாவட்ட தலைவர் மெர்பின் அனைவருக்கும் நன்றி கூறினார்.

## *நித்திரவிளை மறைவட்ட இளையோர் சந்திப்பு*

சீரோ மலபார் இளையோர் இயக்கத்தின் நித்திரவிளை மறைவட்ட இளையோர் சந்திப்பு நிகழ்ச்சி 2022 அக்டோபர் மாதம் 16 ஆம் தேதி ஞாயிற்றுகிழமை நடைபெற்றது. நித்திரவிளை மறைவட்ட ஆலய வளாகத்தில் மதியம் 1:30 மணிக்கு பெயர் பதிவுடன் இந்நிகழ்வு ஆரம்பமானது. தொடர்ந்து 2 மணியளவில் சீனிவிளை ஆலய இளையோர்கள் இறைவணக்கம் பாடினர். மறைமாவட்ட தலைவர் மெர்பின் அனைவரையும் வரவேற்றுப் பேசினார். தொடர்ந்து நித்திரவிளை மறைவட்ட இயக்குனர் அருட்தந்தை றோபின்ஸ் அவர்கள் தொடக்க உரையாற்றினார். நித்திரவிளை ஆலய பங்குதந்தை பேரருத்தந்தை ஜோஸ் முட்டத்துபாடம் அவர்கள் சிறப்புரை வழங்கினார். மறைமாவட்ட இயக்குனர் அருட்தந்தை ஜோசப் சந்தோஷ் அவர்கள் “இளையோர் மனதில் இயேசு” என்ற தலைப்பில் இளையோர்களின் விசுவாச வாழ்வை அடிப்படையாகக் கொண்டு வகுப்பு நடத்தினார். தொடர்ந்து மறைமாவட்ட இணைத்தலைவர் அஞ்சனா அவர்கள் “இன்றைய சமூகத்தில் இளையோர்கள்” என்ற தலைப்பில் மிகவும் கலகலப்பான முறையில் விவாதம் நடத்தினார். மேலும் மறைமாவட்ட பொருளாளர் அஜித் “தற்போதைய சமூகத்தில் வேலை வாய்ப்புகள்” என்ற தலைப்பில் வேலையின்மை பற்றியும் அதை மாற்றுவதற்கான வழிமுறைகள் குறித்தும், சமூகத்தில் உள்ள வேலைகளை எவ்வாறு கண்டுபிடிக்க

முயற்சிக்க வேண்டும் என்பதை குறித்து வகுப்புகள் நடத்தினார். இடையில் நான்கு குழுக்களாகப் பிரிக்கப்பட்டு அனைவருக்கும் ஒவ்வொரு தலைப்புகள் வழங்கப்பட்டு அதை பற்றிய கலந்தாய்வுகளும் நடைபெற்றது. இடையிடையே நடந்த விளையாட்டுக்கள் வகுப்பு அனைத்தும் சிறந்த முறையில் நடைபெற வழிவகுத்தது. பின்னர் திருமதி 'வெளிச்சம்' ஷெறின் அவர்கள் கலந்து கொண்டு "தற்போது சமுதாயத்தில் நடைபெறுகின்ற தீமைகள் குறித்தும், நம்முடைய உடலிலும் மனதளவிலும் ஏற்படுகின்ற மாற்றங்கள் குறித்தும்" சிறந்த முறையில் வகுப்புகள் நடத்தினார். இறுதியில் முஞ்சிறை பங்கை சார்ந்த SMYM உறுப்பினர் மனோஜ் அவர்கள் அனைவருக்கும் நன்றி கூறினார். இயக்க கீதத்துடன் நிகழ்சிகள் நிறைவடைந்தது. மறைமாவட்ட பொறுப்பாளர்கள் நிகழ்சிகளை சிறப்பாக ஒருங்கிணைத்தனர். இந்நிகழ்ச்சிக்காக ஏற்பாடுகளை நித்திரவிளை ஆலய SMYM உறுப்பினர்கள் சிறப்பாக செய்திருந்தனர்.

## *"இயேசுவின் கனவு" இசைக்குழு துவக்கவிழா*

தக்கலை மறைமாவட்ட சீரோ மலபார் இளையோர் இயக்கத்தின் (SMYM) சார்பாக JESUS DREAMZ Music Band என்ற பெயரில் இசைக்குழு தொடங்கப்பட்டுள்ளது. இதனுடைய தொடக்க நிகழ்வு 2022 அக்டோபர் 19 அன்று தெற்றியோடு ஆசீர் வித்யாலயா பள்ளி வளாக அரங்கத்தில் மாலை 6.30 மணியளவில் ஆரம்பமானது. SMYM மறைமாவட்ட துணைச்செயலர் மெர்னிஷா அவர்கள் அனைவரையும் வரவேற்றுப் பேசினார். SMYM மறைமாவட்ட இயக்குநர் அருட்தந்தை ஜோசப் சந்தோஷ் அவர்கள் இதற்கான நோக்கம் குறித்தும் இதனுடைய அடுத்தகட்ட திட்டங்கள் குறித்தும் அறிமுக உரை வழங்கினார். இயக்குநர் தந்தை பேசுகையில் 'இந்த இசைக்குழு மூலம் இளையோர்களின் திறமைகளை மேலும் வலுபடுத்தமுடியும், இத்திட்டம் பல ஆண்டுகளுக்கு முன்னதாக திட்டமிடப்பட்டது தற்போது அதற்கான ஒரு தொடக்கம் கிடைத்துள்ளதாகவும்' கூறினார். தக்கலை மறைமாவட்ட குருகுல முதல்வர் பேரருட்தந்தை தோமஸ் பவ்வத்துபறம்பில் அவர்கள் தொடக்க உரை வழங்கி ஜெபம் செய்து நிகழ்ச்சியை தொடக்கி வைத்தார். குருகுலமுதல்வர் தந்தை பேசுகையில் "இந்த இசைக்குழு மேலும் வளர்ந்து மறைமாவட்டத்தினுடைய எல்லா இடங்களிலும் இதனுடைய நோக்கத்தை அறிய செய்ய வேண்டும், பாடல் பாட திறமையுள்ள இளையோர்களை இக்குழுவில் சேர்த்து மறைமாவட்டத்தோடு இணைந்து பயணிக்க வேண்டும்" என்று கூறினார். பின்னர் இசைநிகழ்சி ஆரம்பமானது. மாலைக்கோடு ஆலய SMYM உறுப்பினர் நீது பரதநாட்டியம் ஆடினார். இடையே பொங்கல் திருநாளை மையபடுத்தி அருட்தந்தை றோபின் ஜோஸ் அவர்களால் எழுதப்பட்டு, SMYM உறுப்பினர்களால் ஒருங்கிணைக்கப்பட்ட நடனத்திற்கான முன்னோட்டம் ஒளிபரப்பபட்டது, சீனாய் இருமாத இதழின்

இணையவழி முதல் பிரதி வெளியிடப்பட்டது, அம்மா உறவுமுறையை வெளிப்படுத்தும் நடனமும், நித்திரவிளை மறைவட்ட இளையோர்களின் குழுநடனமும் இந்நிகழ்ச்சிகளை மேலும் உற்சாகமூட்டுவதாக அமைந்தது. முடிவில் SMYM மறைமாவட்ட ஆலோசகர் ஜெசின் அனைவருக்கும் நன்றி கூறினார். இயக்க கீதத்துடன் நிகழ்ச்சிகள் நிறைவடைந்தது. இந்த இசைக்குழுவில் மெர்பின், அமித், டோம், அபிஷால், அஜின், அஞ்சலி ஆகியோர் இடம்பெற்றிருந்தனர். முடிவில் அனைவருக்கும் அன்பின் விருந்து வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சிக்கான அனைத்து ஏற்பாடுகளையும் SMYM மறைமாவட்ட பொறுப்பாளர்கள் மற்றும் தெற்றியோடு புனித பவுல் ஆலய பங்குமக்கள் சிறப்பாக செய்திருந்தனர். இந்நிகழ்ச்சியில் அருட்தந்தையர்கள், அருட்கன்னியர்கள் முன்னாள் பொறுப்பாளர்கள், மற்றும் இளையோர்கள் பலர் கலந்துகொண்டனர்.

### *மதுரை மறைபரப்புதள சந்திப்பு மற்றும் மறைமாவட்ட செயல்பாடுகள் மதிப்பீடு:*

தக்கலை மறைமாவட்ட சீரோ மலபார் இளையோர் இயக்கத்தின் பொறுப்பாளர்களுக்கான ஒருநாள் சுற்றுப்பயணம் மற்றும் பொறுப்பாளர்களுக்கான கூட்டம் மதுரை திருத்தொண்டுதள வளாகத்தில் 2022 அக்டோபர் 24 திங்கள்கிழமை நடைபெற்றது. காலை 10 மணியளவில் மதுரை பகுதியில் சுற்றுப்பயணம் மேற்கொள்ளப்பட்டது. தொடர்ந்து மதுரை திருத்தொண்டுதளம் பார்வையிடப்பட்டது. மதுரை திருத்தொண்டுதள ஒருங்கிணைப்பாளர் அருட்தந்தை ஜெபனேஷ் அவர்கள் அனைவரையும் வரவேற்றுப்பேசினார். அருட்சகோதரி அவர்கள் மதுரை மிஷன் செயல்பாடுகள் குறித்து எடுத்துரைத்தார். மதியம் 2 மணிக்கு SMYM மறைமாவட்ட இயக்குநர் அருட்தந்தை ஜோசப்



சந்தோஷ் அவர்கள் தலைமையில் பொறுப்பாளர்கள் கூட்டம் ஆரம்பமானது. இதில் முக்கியமாக எடுக்கப்பட்ட தீர்மானங்கள்

1. மறைமாவட்ட அளவில் நடைபெற்று வருகின்ற அலகு சந்திப்பு நிகழ்ச்சிகளில் பொறுப்பாளர்கள் முழுமனதுடன் சிறப்பாக செயல்பட வேண்டும்

2. வருகின்ற டிசம்பர் மாதம் படந்தாலுமூடு மறைவட்டம் தலைமையில் நடைபெறுகின்ற கிறிஸ்துமஸ் போட்டிகளில் அனைத்து இளையோர்களையும் பங்குபெற செய்யவேண்டும்.

3 .Jesus Dreamz இசைக்குழுவை மேலும் விரிவுபடுத்தி அதிகமான இளையோர்களை பங்குபெற செய்ய வேண்டும்.

4.அடுத்த வருடத்திற்கான (2023) வருடாந்திர திட்டம் குறித்து விவாதிக்கப்பட்டது.

கடைசியாக மறைமாவட்ட தலைவர் மெர்பின் அனைவருக்கும் நன்றி கூறினார். இறுதியில் அனைவருக்கும் தேநீர் வழங்கப்பட்டது. பின்னர் வாடிபட்டி ஆரோக்கிய அன்னை திருத்தலத்திற்கு பயணம் மேற்கொள்ளப்பட்டது.

## மஞ்சாலுமூடு மறைவட்ட இளையோர் சந்திப்பு

சீரோ மலபார் இளையோர் இயக்கத்தின் மஞ்சாலுமூடு மறைவட்ட இளையோர் சந்திப்பு நிகழ்ச்சி 2022 அக்டோபர் மாதம் 30 ஆம் தேதி ஞாயிற்றுகிழமை நடைபெற்றது. மஞ்சாலுமூடு மறைவட்ட ஆலய வளாகத்தில் மதியம் 1:30 மணிக்கு பெயர் பதிவுடன் ஆரம்பமானது. தொடர்ந்து 2 மணியளவில் முக்கூட்டுக்கல் ஆலய இளையோர்கள் இறைவணக்கம் பாடினர். முழுக்கோடு இளையோர் இயக்க உறுப்பினர் அகிலா அனைவரையும் வரவேற்றுப் பேசினார். தொடர்ந்து மஞ்சாலுமூடு மறைவட்ட இயக்குனர் அருட்தந்தை றோபின் ஜோஸ் அவர்கள் தொடக்கஉரையாற்றினார். மஞ்சாலுமூடு ஆலய பங்குதந்தை பேரருட்தந்தை அகஸ்டின் அவர்கள் சிறப்புரை வழங்கினார். மறைமாவட்ட இயக்குனர் அருட்தந்தை ஜோசப் சந்தோஷ் அவர்கள் “இளையோர் மனதில் இயேசு” என்ற தலைப்பில் இளையோர்களின் விசுவாச வாழ்வை அடிப்படையாகக் கொண்டு வகுப்புகள் நடத்தினார். மறைமாவட்ட துணைத்தலைவர் ஜாஸ்மின் “இளையோரின் வாழ்க்கையில் நம்பிக்கையின் அவசியம்” என்ற கருத்துக்களை பகிர்ந்து கொண்டார். அதை தொடர்ந்து அவர்கள் மறைமாவட்ட பொருளாளர் அஜித் “இன்றைய சமூகத்தில் இளையோர்கள்” என்ற தலைப்பில் விவாதம் நடத்தினார். அதை தொடர்ந்து மறைமாவட்ட செயற்குழு ஆலோசகர் ஜெசின் “தற்போதைய சமூகத்தில் வேலை வாய்ப்புகள்” என்ற தலைப்பில் வேலையின்மை பற்றியும் அதை மாற்றுவதற்கான வழிமுறைகள் குறித்தும், சமூகத்தில் உள்ள

வேலைகளை எவ்வாறு கண்டுபிடிக்க முயற்சிக்க வேண்டும் என்பதை குறித்து வகுப்புகள் நடத்தினார். இடையில் நான்கு குழுக்களாகப் பிரிக்கப்பட்டு அனைவருக்கும் ஒவ்வொரு தலைப்புகள் வழங்கப்பட்டு அதை பற்றிய கலந்தாய்வுகளும் நடைபெற்றது. இடையிடையே விளையாட்டுக்கள் மற்றும் நடனங்கள் வகுப்பு அனைத்தும் சிறந்த முறையில் நடைபெற வழிவகுத்தது. கடைசியில் மறைமாவட்ட செயலர் மெரின் சுஜித் அனைவருக்கும் நன்றி கூறினார். இயக்க கீதத்துடன் நிகழ்சிகள் நிறைவடைந்தது. மறைமாவட்ட பொறுப்பாளர்கள் நிகழ்சிகளை சிறப்பாக ஒருங்கிணைத்தனர். இந்நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை மஞ்சாலுமூடு மறைவட்ட செயற்குழு உறுப்பினர்கள் சிறப்பாக செய்திருந்தனர். அதேபோன்று மஞ்சாலுமூடு மறைவட்டத்தை சார்ந்த அலகு ஊக்குவிப்பாளர்கள் நிகழ்ச்சியின் உடன் இருந்து தேவையான உதவிகளைச் செய்திருந்தார்.

## *அலகு சந்திப்பு*

தக்கலை மறைமாவட்ட சீரோ மலபார் இளையோர் இயக்கத்தின் செயற்குழு உறுப்பினர்கள் தற்போது பங்ககளவில் நடைபெறும் அலகுகளை பார்வையிட்டு வருகின்றனர். ஞாயிற்றுகிழமைகளில் இளையோர்களுடன் இணைந்து திருப்பலியில் பங்கேற்று அலகு சந்திப்பு நிகழ்ச்சி நடைபெற்று வருகிறது. மேலும் *02.10.2022* அன்று முஞ்சிறை மற்றும்



வாறுதட்டு ஆலயத்திலும், *09.10.2022* அன்று முழுக்கோடு மற்றும் முக்கூட்டுக்கல் ஆலயத்திலும், *16.10.2022* அன்று நித்திரவிளை மற்றும் சீனிவிளை ஆலயத்திலும் *23.10.2022* அன்று தெற்றிவிளை மற்றும் மாலைக்கோடு ஆலயத்திலும் *30.10.2022* அன்று பென்கிரி மற்றும் மஞ்சாலுமூடு ஆலயத்திலும் நடைபெற்றது. தற்போது களியல் மற்றும் ஆறுகாணி ஆகிய மறைவட்டங்களில் அலகுசந்திப்பு நடைபெற்று வருகிறது.

இவண்
மெரின் சுஜித், செயலர்

சிறுமலர் MISSION LEAGUE

# மிஷன் லீக் இயக்கம்

சிறுமலர் மிஷன் லீக் இயக்கத்தின் மறைவட்ட இயக்குநர் தந்தையர்களின் கூட்டம் இணையதளம் வாயிலாக 1.10.2022 அன்று இரவு 8 மணியளவில் நடைபெற்றது. இயக்குனர் தந்தை பிரிண்டோ குரியாஸ் அவர்கள் தலைமையில் கூட்டம் நடைபெற்றது. அன்றைய கூட்டத்தில் சிறுமலர் மிஷன் லீக் இயக்கத்தின் 75 ஆவது பவளவிழா நடைபெற்று வரும் நிலையில் அதற்கு ஆயத்தமாக எழுச்சிப் பயணம் நடத்துவது பற்றியும் ஆலோசிக்கப்பட்டது. இறுதியில் இறுதி ஜெபத்துடன் கூட்டம் நிறைவு பெற்றது. 16.10.2022 அன்று எல்லா மறைவட்ட ஆலயங்களிலும் எழுச்சிப் பயணம் தொடங்கியது. மிகுந்த ஆடம்பரத்துடன் விசுவாச கோஷங்கள் எழுப்பி முத்திரை வாக்கியங்கள் முழங்க இசைக்கருவிகள் ஒலிக்க ஒவ்வொரு பங்கிலும் எழுச்சிப் பயணம் வரவேற்கப்பட்டு வருகிறது. ஒரு வாரம் ஒரு பங்கில் இதற்கான செபங்களும் விரிவுரைகளும் நடைபெறும். கடைசி நாள் பொதுக்கூட்டத்துடன் அடுத்த பங்கிற்கு எடுத்துச் செல்வார்கள். இதன் நோக்கம் கடந்த 75 ஆண்டுகளாக நலம் பெற்ற விசுவாச வாழ்வை மக்களுக்கு பிரதிபலிக்கச் செய்வதே ஆகும்.

16 ஆம் தேதி மறைவட்ட அளவில் நித்திரவிளை மறைவட்ட பொறுப்பாளர்கள் கூட்டம் இயக்குநர் தந்தை பிரிண்டோ குரியாஸ் அவர்கள் தலைமையில் துணை இயக்குநர் Sr.ஆன்கிரேஸ் அவர்கள் முன்னிலையில் கிறிஸ்துராஜபுரம் ஜெயமாதா மெட்ரிக் பள்ளியில் வைத்து நடைபெற்றது. அன்றைய கூட்டத்தில் மறைமாவட்ட றாலி நடத்துவது பற்றியும் பவள விழா ஜுபிலி நிறைவு விழா கொண்டாடுவது பற்றியும் ஆலோசிக்கப்பட்டது. மறைவட்ட அளவில் அதற்காக ஒத்துழைப்புகள் வழங்க தந்தையர்களை கேட்டுக் கொண்டார்கள்.

19 ஆம் தேதி மறைமாவட்ட செயற்குழு உறுப்பினர்கள் கூட்டம் குருகுல முதல்வர் பேரருட்தந்தை தோமஸ் பௌவத்துபறம்பில் அவர்கள் தலைமையில் ஆயர் இல்லத்தில் வைத்து காலை 11 மணியளவில் நடைபெற்றது மறைவட்ட இயக்குநர்களும் செயற்குழு உறுப்பினர்களும் கலந்து கொண்டு பவளவிழா ஏற்பாடுகள் பற்றியும் யார் யார் பொறுப்புகள் ஏற்று செய்ய வேண்டும் என்பது பற்றியும் ஆலோசிக்கப்பட்டது.

30 ம் தேதி மறைமாவட்ட செயற்குழு உறுப்பினர்கள் கூட்டம் மறைமாவட்ட மிஷன் லீக் தலைவர் திரு அஜு அவர்கள் முன்னிலையில் படந்தாலுமூடு ஆலய வளாகத்தில் நடைபெற்றது. அன்றைய கூட்டத்தில்

தலைவர் மற்றும் செயலர் ஆகியோர் கலந்துகொண்டு பவள விழாவின் நிறைவு விழா 2023 ஜனவரி 29 அன்று தக்கலை மறைமாவட்டத்தில் நடத்துவது பற்றியும் அதற்கான குழுக்கள் தேர்வு பற்றியும் கலந்துரையாடி ஆலோசித்தனர். பின் இறுதி ஆசீருடன் கூட்டம் நிறைவு பெற்றது.

**அருட்தந்தை பிரிண்டோ குரியாஸ்**

**இயக்குநர்**

## தென்காசி மறைபரப்புத்தளம்

### புளியரை சிறுமலர் தேவாலய திருவிழா



புளியரை சிறுமலர் தேவாலய திருவிழாவானது 2022 அக்டோபர் 5 முதல் 9 வரையான தேதிகளில் கொண்டாடப்பட்டது. அத்துடன் திருமுழுக்கு, உறுதிபூசுதல், நற்கருணை ஆகிய திருவருட்சாதனங்களும் வழங்கப்பட்டன.


### விவிலிய வினாடி வினா போட்டி.

தென்காசி மறைத்தளத்தில் உள்ள மாணவர்களுக்கு திருப்பணியாளர் இயக்கம் சார்பாக விவிலிய வினாடி வினா போட்டியை அருட்தந்தை லிஜோ தெக்கேல் அவர்கள் நடத்தினார். இதில் மேக்கரை ஆலயம் முதல் பரிசையும், புளியரை ஆலயம் இரண்டாம் இடத்தையும் பெற்று மகிழ்ந்தனர்.

### ஜெபமாலை பவனி

தென்காசி மறைத்தளத்தில் அக்டோபர் மாத ஜெபமாலையை சிறப்பிக்கும் வகையில் அக்டோபர் 23 ஆம் தேதி புளியரை ஆலயத்திலிருந்து புதூர் புலரி மெட்ரிகுலேஷன் பள்ளிக்கூடம் வரை ஜெபமாலை பவனியானது சிறப்பிக்கப்பட்டது. பேரருட்தந்தை தோமஸ் பௌவத்துபறம்பில் அவர்கள் வருகைதந்து பவனியில் கலந்து கொண்டதுடன் இறுதியில் நல்லதொரு சிறப்புரையும் ஆற்றினார்.

# இல்வாழ்வு இயக்கம்



***"நம்மைச் சந்தித்துவிட்டு செல்ல இயேசு வரவில்லை. மாறாக, நம்மோடு குடிகொள்ள வந்துள்ளார் என்பதால் அவரிடமிருந்து நம்மை எதனாலும் பிரிக்க முடியாது... நம் மகிழ்வு, துயர்கள், ஏக்கங்கள், அச்சங்கள், நம்பிக்கைகள் கவலைகள் என அனைத்திலும் நம்மோடு பங்குகொள்ள விரும்பும் இறைவனுக்காக நம் இதயங்களைத் திறந்து வைப்போம்.***

***– திருத்தந்தை பிரான்சிஸ்***

## இல்வாழ்வு இயக்கம்

உலகில் ஆணையும், பெண்ணையும் உருவாக்கி குடும்பத்தை ஏற்படுத்தியவர் கடவுள். ஆதாமும் ஏவாளும் குடும்பமாக தன்னை புகழ்ந்து தன் வழியிலே வாழ வேண்டுமென்று விதித்தவரும் கடவுள். ஆனால் அவர்கள் பாவம் செய்து கடவுளுக்கு எதிரானார்கள். நம் அன்னை மரியாள் கடவுளுக்கு தன்னை ஒப்புவித்து சிறந்த குடும்பத்தை உருவாக்கினார். அத்திருக்குடும்பத்தை போன்று நமது குடும்பங்களும் மகிழ்ச்சியாய் வாழ வேண்டும் என்ற நோக்குடன் இல்வாழ்வு இயக்கம் செயல்பட்டு வருகிறது.

## Counselling Service

இன்றைய காலகட்டத்தில் குடும்பத்தில் பணமோகமும் வாழ்க்கையில் அந்தஸ்து மோகமும் கலாச்சார பாதிப்பு மற்றும் இணையதள பயன்பாட்டால் கணவனுக்கும் மனைவிக்கும் மத்தியில் ஏற்பட்டுள்ள பிரிவினைகள், பிள்ளைகளும் கலாச்சாரத்தாலும் பாதிக்கப்பட்டு மன உளச்சலுக்கு உள்ளாகி குடும்பங்களில் பிரச்சனை ஏற்பட்டு வருகிறது. இதனைச் சரி செய்ய நமது இல்வாழ்வு இயக்கத்தில் வைத்து Counselling நடைபெற்று வருகிறது Counselling யை அருட்தந்தை மற்றும் அருட்சகோதரி அவர்கள் ஆன்மீக முறையில் ஆலோசனை மற்றும் அறிவுரைகளை வழங்கி குடும்பங்கள் மகிழ்ச்சியாய் வாழ வழிகாட்டி வருகிறார்கள்.

### *மாதர் ஜோதிஸ் இயக்கம்*

மாதர் ஜோதிஸ் பங்கு பொறுப்பாளர்கள் கூட்டமானது 24.10.2022 அன்று இயக்குநர் தந்தை ஜிம்மி தெக்கேகடுமத்தில் அவர்கள் தலைமையில் மதியம் 2 மணிக்கு சிறப்பு ஜெபமாலை செபத்துடன் ஆரம்பமானது. இதில் சுமார் 75 பொறுப்பாளர்கள் கலந்து கொண்டனர். மாதர் ஜோதிஸ் தலைவர் திருமதி ஜூலியட் சுனில் அவர்கள் வரவேற்புரை கூறினார். பின்னர் செயலர் திருமதி



பென்சி ராஜகுமார் அவர்கள் கடந்த 3 மாதங்களாக நடைபெற்ற மாதர் ஜோதிஸ் இயக்கத்தின் செயல்பாடுகளை அறிக்கையாக வாசித்தார். தொடர்ந்து இயக்குநர் தந்தை அவர்கள் மறைக்கல்வியானது வீடுகளில் பிள்ளைகளுக்கு சொல்லி கொடுக்க வேண்டும் என்பதை குறித்தும் மற்றும் பல கருத்துக்களையும் வழங்கினார். பின்னர் ஒவ்வொரு மறைவட்டத்திற்குமான Animators தெரிவு செய்யப்பட்டார்கள். ஸ்மார்ட் கிறிஸ்மஸ் குறித்த கருத்துக்களை இயக்குநர் தந்தை பதிவிட்டு பின்னர் அடுத்த வருடத்திற்கான ஸ்மார்ட் கிறிஸ்மஸ் கார்டுகளும் ஒவ்வொரு பங்கிற்கும் வழங்கப்பட்டது. அதன் பின்னர் குழு நடனம், வசனம் எழுதும் போட்டி, வினாடி வினா, கருபொருள் போட்டிகளுக்கான விதிமுறைகள் குறித்து கூறப்பட்டது. இறுதியில் முஞ்சிறை பங்கைச் சார்ந்த திருமதி டைசி அவர்களின் நன்றியுரையுடன் கூடுகை இனிதே நிறைவு பெற்றது.

மாதர் ஜோதிஸ் இயக்கம் சார்பாக நவம்பர் 5 சனிக்கிழமை கிராமிய நடன போட்டியும் டிசம்பர் மாதம் உணவு திருவிழாவும் கல்லுவிளை ஆசீர் ஆடிட்டோரியத்தில் வைத்து நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

### *திருமண ஆயத்தப் பயிற்சி*

2022 ஜனவரி முதல் அக்டோபர் வரை 127 பேர் திருமண ஆயத்தப் பயிற்சி வகுப்புக்கு வருகை புரிந்து உள்ளனர். அவர்களின் விவரம் பின்வருமாறு.

| Participated list for Marriage Preparation course from January 2022 to October 2022 | | | |
|---|---|---|---|
| Sl. NO | PLACE | PARISH | NO of Candi-dates |
| MANJALUMOODU FORANE | | | |
| 1 | MUKKUTTUKAL | HOLY FAMILY CHURCH | 5 |
| 2 | MUZHUCODE | ST.THOMAS CHURCH | 14 |
| 3 | MALAICODE | HOLY CROSS CHURCH | 5 |
| 4 | MANJALAMOO-DU | LITTLE FLOWER CHURCH | 8 |
| KALYAL FORANE | | | |
| 5 | PALLIKONAM | SACRED HEART CHURCH | 8 |
| 6 | KARODE | ST.JOSEPH CHURCH | 1 |
| 7 | KALIYAL | ST.MARY CHURCH | 2 |
| NITHRAVILAI FORANE | | | |
| 8 | VARUTHATTU | ST.XAVIER CHURCH | 3 |
| 9 | NITHRAVILAI | JAYA MATHA CHURCH | 4 |
| 10 | MUNCHIRAI | ST.GEORGE CHURCH | 3 |
| 11 | VAYALINKARAI | ST.ANTONY'S CHURCH | 10 |
| 12 | CHRISTHURAJA PURAM | CHRISTHU RAJA CHURCH | 4 |
| 13 | CHEENIVILAI | AMALA MARIA CHURCH | 1 |
| PADANTHALUMOODU FORANE | | | |
| 14 | ANNIKARAI | ST.MATHEW CHURCH | 4 |
| 15 | PADANTHALU-MOODU | SACRED HEART CHURCH | 6 |
| 16 | THETTIYODU | ST PAUL'S CHURCH | 3 |
| 17 | KAZHUVAN-THITTAI | ST.MARTIN DE PORRES CHURCH | 4 |
| 18 | ATHENCODE | ST.MARIA GORETTI CHURCH | 2 |

| SOOSAIPURAM FORANE | | | |
|---|---|---|---|
| *19* | *SOOSAIPURAM* | *ST.JOSEPH'S CHURCH* | *1* |
| *20* | *MANGARAI* | *ST.JAMES CHURCH* | *4* |
| *21* | *THAKKALIVILAI* | *HOLY FAMILY CHURCH* | *1* |
| *22* | *PILANKARAI* | *LORETTO MATHA CHURCH* | *2* |
| *23* | *KILLIYOOR* | *DEVA MATHA CHURCH* | *2* |
| *24* | *MATHAPURAM* | *ST.THOMAS CHURCH* | *1* |
| *25* | *PALAPPALLAM* | *CHRIST THE KING CHURCH* | *1* |
| *26* | *KUDUKA-CHIVILAI* | *ST.FATHIMA CHURCH* | *1* |
| ARUKANY FORANE | | | |
| *27* | *NETTA* | *ST.THOMAS CHURCH* | *3* |
| *28* | *MEZHACODE* | *ST.FRANCIS ASSISI* | *1* |
| *29* | *ARUKANY* | *HOLY FAMILY CHURCH* | *2* |
| *30* | *PATHUKANY* | *ST.THOMAS CHURCH* | *2* |
| *31* | *PENU* | *ST.MARY CHURCH* | *1* |
| THUCKALAY PILANKALAI FORANE | | | |
| *32* | *PILANKALAI* | *ST.LITTLE FLOWER CHURCH* | *4* |
| *33* | *PARAICODE* | *CHRIST THE KING CHURCH* | *5* |
| *34* | *KAISALAVILAI* | *ST.XAVIER CHURCH* | *2* |
| *35* | *KATTATHURAI* | *ST.MICHEAL CHURCH* | *3* |
| *36* | *ANAYADI* | *ST.GEORGE MISSION CHURCH* | *2* |
| *37* | *ANJUGRAMAM* | *ST.THOMAS CHURCH* | *1* |
| *38* | *MAHARAJAPUR-AM* | *ST.MICHEAL CHURCH* | *1* |
| | TOTAL NO OF CANDIDATES | | 127 |

**அருட்தந்தை ஜிம்மி தெக்கேகடுமத்தில்**

**இயக்குநர்**

# மரியாயின் சேனை
# தக்கலை கொமித்சியம்

### *ஜெபமாலை திருப்பவனி*

அக்டோபர் மாதம் மரியன்னையின் ஜெபமாலையின் மணம் வீசும் மாதம் இதை முன்னிட்டு மரியாயின் சேனை தக்கலை கொமித்சியத்தின் சார்பாக மறை மாவட்ட அளவில் *23-10-2022* ஞாயிறு பிற்பகல் *2:30* மணிக்கு பாலப்பள்ளம் கிறிஸ்து அரசர் ஆலயத்திலிருந்து சூசைபுரம், புனித சூசையப்பர் மறைவட்ட ஆலயம் வரை ஜெபமாலை திருப்பவனி நடைபெற்றது. தொடக்கத்தில் மரியாவின் சேனை தக்கலை கொமித்சிய ஆன்மீக இயக்குனர் பேரருட்தந்தை ஆன்றனி ஜோஸ் ஜெபமாலையின் சிறப்பு பற்றி தொடக்க உரையாற்றினார்கள். தொடர்ந்து சேனையின் ஆரம்ப ஜெபம் பாலப்பள்ளம் கிறிஸ்து அரசர் ஆலய பங்குதந்தை, அருட்தந்தை ஜாண்பால் அவர்கள் கூறிய பிறகு ஜெபமாலை பவனியானது ஆரம்பமானது. அப்பவனியின் முன்பு பெரிய ஜெபமாலை பாலப்பள்ளம் பிரசிடியம் சார்பாக கொண்டு செல்லப்பட்டது. பவனியின் நடுவில் அன்னையின் சொருபம் தாங்கிய வாகனம் சென்றது. இத்திருப்பவனியானது பாலப்பள்ளம் வெள்ளியாவிளை காட்டுக்கடை வழியாக சூசைபுரம் புனித சூசையப்பர் மறைவட்ட ஆலயம் வந்தடைந்தது. அதன் பின்னர் மறைமாவட்ட ஆவண காப்பாளர் பேரருட்தந்தை ஜோசி தலைமையில் கூட்டத்தின் தொடக்கத்தில் சேனை சங்கிலி ஜெபம் சொல்லப்பட்டு பொதுக்கூட்டம் நடைபெற்றது தக்கலை கொமித்சிய தலைவர் சகோ. பெஞ்சமின் போஸ் அனைவரையும் வரவேற்றார்கள். மறைமாவட்ட ஆவண காப்பாளர் பேருட்தந்தை ஜோஷி ஜெபமாலை செய்வதால் நமக்கு கிடைக்கும் நன்மைகள் பற்றி தலைமையுரை ஆற்றினார்கள். அதனைத் தொடர்ந்து சூசைபுரம் மற்றும் பாலப்பள்ளம் சேனை சகோதரிகள் மாதா பாடல் பாடினார்கள். பின்னர் கோட்டாறு ரீஜியா முன்னாள் தலைவர் சகோ யூஜின் அவர்கள் மரியன்னை செய்தி வழங்கினார்கள். அதனை தொடர்ந்து கிள்ளியூர் தேவமாதா ஆலய பங்குத்தந்தை அருட்தந்தை சாஜன் அவர்கள் சேனை இறுதி ஜெபம் செய்தார்கள். கொமித்சிய முன்னாள் ஆன்ம இயக்குனர் பேரருட்தந்தை ஜோஸ் முட்டத்துபாடம் இறுதி ஆசீர் வழங்கினார்கள். தொடர்ந்து கொமித்சிய துணை தலைவர் சகோ தோமஸ் பன்னீர்செல்வம் அனைவருக்கும் நன்றி கூறினார்கள். நிகழ்ச்சியை சகோ பிரபு தொகுத்து வழங்கினார்கள். இத்திருப்பவனிக்கு பேரருட்தந்தையர்கள், அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள் ஏராளமான இறைமக்கள் மற்றும் மரியாயின் சேனையினர் கலந்து கொண்டார்கள்.

***அன்னையின் பணியில்***
***செயலர்***




# வின்சென்ட்-தே-பவுல் சபை

### *தேசத்தோடு ஒருநாள் துப்புரவு முகாம்*

தக்கலை மத்திய பேரவையின் சார்பாக "தேசத்தோடு ஒரு நாள்" என்ற தலைப்பில் வருடம் தோறும் அக்டோபர் 2 ஆம் தேதி நடைபெறும் துப்புரவு முகாம் இம்முறை உத்திரம்கோடு ஓசானாம் கல்வி நிலையத்தில் வைத்து அக்டோபர் 1-ம் தேதி சிறப்பாக நடைபெற்றது. தக்கலை மத்திய பேரவையின் ஆன்மீக ஆலோசகர் பேரருட்தந்தை தோமஸ் பௌவத்துபறம்பில் அவர்கள் இந்நிகழ்வை துவங்கி வைத்தார். அனைத்து வட்டார சபைகளிலிருந்தும் 50 க்கும் மேற்பட்டோர் இந்நிகழ்வில் கலந்து கொண்டு தூய்மை பணியில் பங்கேற்றனர். மேலும் இந்நிகழ்வில் தக்கலை மறைமாவட்ட ஆவண காப்பாளர் பேரருட்தந்தை ஜோஷி குளத்துங்கல் மற்றும் முழுக்கோடு



பங்கு தந்தை Fr. ஆன்றோ ஆகியோரும் பங்கேற்று வின்செந்தியர்களை ஊக்கமூட்டினர்.

### *திட்டம் வழங்குதல்*

2.10.2022 ஞாயிற்றுக்கிழமை மதியம் 12.00 மணிக்கு மாதாபுரம் புனித தோமையார் பெண்கள் கிளைசபை சார்பாக சுயதொழில் கடன் உதவித் திட்டத்தின் கீழ் ஆடு, மாடு மற்றும் கோழி வளர்க்க ஐந்து நபர்களுக்கு கடன் உதவித் தொகையாக ரூ.5000 வீதம் மொத்தம் ரூ.25000 பயனாளிகளுக்கு கொடுக்கப்பட்டது. மாதாபுரம் தோமையார் பங்கு தந்தையும் வின்சென்ட் தே பவுல் கிளைசபையின் ஆன்மீக ஆலோசகருமாகிய அருட்தந்தை சாஜன் அவர்கள் திட்ட தொகையை பயனாளிகளுக்கு வழங்கினார்கள். மத்தியசபை தலைவர் சகோதரர் ராபி அவர்கள் இந்த நிகழ்வினை முன்நின்று நடத்தினார்கள். மத்தியசபை செயலாளரும் சூசைபுரம் வட்டாரசபையின் திட்ட அலுவலருமாகிய சகோதரர் சோனிக் ரீகன் கோப்புகளை பார்வையிட்டார். இந்த நிகழ்வினை சூசைபுரம் வட்டாரசபை தலைவர் சகோதரர் பிரபு ஒருங்கிணைத்து நடத்தினார்கள்.

### *மஞ்சாலுமூடு வட்டார சபையின் ஆண்டு விழா*

மஞ்சாலுமூடு வட்டார சபையின் ஆண்டு விழாவானது

09.10.2022 அன்று மதியம் 2 மணியளவில் மஞ்சாலுமூடு மறைவட்ட ஆலய அரங்கில் வைத்து நடைபெற்றது. விழாவில் தெற்றிவிளை ஆன்மீக ஆலோசகர் அருட்தந்தை றோபின் ஜோஸ் அவர்கள் ஆன்மீக உரையாற்றினார்கள். முக்கூட்டுக்கல் ஆன்மீக ஆலோசகர் அருட்தந்தை சுபின் அவர்கள் தலைமையுரை நிகழ்த்தினார். அருட்தந்தை அகஸ்டின் தலோடில் அவர்கள் சிறப்புரை நிகழ்த்தினார்கள். தக்கலை மத்திய பேரவையின் தலைவர் சகோ றாபி மற்றும் செயலர் சகோ சோனிக்ரீகன் அவர்கள் வின்சென்டியர்களை வாழ்த்தி பேசினார்கள். நிகழ்வுகளை வட்டார சபை தலைவர் சகோ ஜார்ஜ் மற்றும் பொறுப்பாளர்களும் ஒருங்கிணைத்து வழிநடத்தினார்கள். விழாவில் சுமார் 80 உறுப்பினர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தர்கள்.

### படந்தாலுமூடு வட்டார சபையின் ஆண்டு விழா

படந்தாலுமூடு வட்டார சபையின் ஆண்டு விழாவானது 09.10.2022 அன்று மதியம் 2 மணியளவில் படந்தாலுமூடு திரு இருதய ஆலயத்தில் வைத்து அருட்தந்தை மகேஷ் அவர்கள் தலைமையில் ஆராதனையுடன் விழா ஆரம்பமானது. விழாவில் மத்திய சபையின் திட்ட அலுவலர் சகோ. எட்வின்சன் சிறப்புரையாற்றினார்கள். படந்தாலுமூடு ஆன்மீக ஆலோசகர் அருட்தந்தை சத்தியநேசன் மற்றும் தெற்றியோடு ஆன்மீக ஆலோசகர் அருட்தந்தை ஜோசப் சந்தோஷ் அவர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள். வட்டார சபை தலைவர் சகோ ஜெபமணி மற்றும் பொறுப்பாளர்களும் சேர்ந்து இவ்விழாவினை ஒருங்கிணைத்து வழிநடத்தினார்கள். விழாவில் 66 வின்சென்தியர்கள் கலந்துகொண்டு சிறப்பித்தார்கள்.

### புதிய பொறுப்பாளர் பதவியேற்பு

மஞ்சாலுமூடு வட்டார சபைக்குட்பட்ட பென்கிரி புனித பெனடிட் கிளைச் சபையின் புதிய தலைவராக சகோ ஜாண் பெனடிக்ட் அவர்கள் தேர்வு செய்யப்பட்டு ஆன்மீக ஆலோசகர் அருட்தந்தை சிஜோ அவர்கள் முன்னிலையில் தலைமை பொறுப்பை ஏற்றுக்கொண்டார். வட்டார சபை தலைவர் சகோ. ஜார்ஜ் வின்சென்ட் மற்றும் வின்செந்திய உறுப்பினர்கள் கலந்து கொண்டு நிகழ்வை சிறப்பித்தார்கள்.

### வெள்ளி விழா நினைவு விவிலிய பவனி

தக்கலை மத்திய சபையின் வெள்ளி விழாவையொட்டிய "திருவிவிலிய ஒளிச்சுடர்" களியல் வட்டார சபைக்குட்பட்ட ஆலயங்களில் பவனியாக எடுத்து செல்லப்பட்டு செபம் செய்து வருகிறார்கள்.

தகவல் சேகரிப்பு
D. P. ஷாஜி
தகவல் தொடர்பு அலுவலர்

# St. Alphonsa College of Arts and Science

***இந்திய அளவிலான பல்கலைக்கழக தரவரிசையில் புனித அல்போன்சா கல்லூரி***

சூசைபுரம் புனித அல்போன்சா கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் தேசிய அளவிலான சிறந்த கலை அறிவியல் கல்லூரி என்பதற்கான ஆய்வுகள் அக்டோபர் 12, 13 ஆகிய நாட்களில் நடைபெற்றன. இதில் தேசிய தரமதிப்பீட்டு அமைப்பின் சார்பாக கண்ணூர் பல்கலைக்கழக துணைவேந்தர் முனைவர் எம்.கே. அப்துல்காதர் ஆய்வுக்குழுவின் தலைவராகவும், ஒரிசா மற்றும் கர்னாடகாவைச் சேர்ந்த முன்னாள் கல்லூரி முதல்வர்கள் ஜெயந்தகுமார் பரிடா, மகாவீரர் கோதலே ஆகியோர் கலந்து கொண்டனர். இரண்டு நாட்களாக நடைபெற்ற இந்திய அளவிலான கல்லூரிகள் தரவரிசையில் புனித அல்போன்சா கல்லூரி இந்திய அளவில் 2.96 புள்ளிகள் பெற்று B++ தரத்தினை அக்டோபர் 18 அன்று பெற்றது. கல்லூரி தொடங்கப்பட்டு எட்டு வருடங்களுக்குள்ளாக எந்தக் கல்லூரியும் தேசிய தரமதிப்பீட்டுக்கு விண்ணப்பிப்பதில்லை. ஆனால் புனித அல்போன்சா கல்லூரி விண்ணப்பித்ததிலிருந்தே இக்கல்லூரியின் தரத்தையும் சிறப்பையும் அறிந்து கொள்ள முடிகிறது என்று ஆய்வுக் குழுவின் தலைவராகக் கலந்து கொண்ட முன்னாள் துணைவேந்தர் எம். கே. அப்துல்காதர் உட்பட ஆய்வுக்குழு உறுப்பினர்கள் கூறியதோடு மேலும் பல்வேறு சிறப்புகளைப் பெறவும் வாழ்த்தினர். தேசிய அளவிலான கல்லூரிகள் தரவரிசைப் பட்டியலில் B++ பெற்று கல்லூரிக்குச் சிறப்பு சேர்த்த முதல்வர் முனைவர் எஸ்.இசையாஸ், துணை முதல்வர் முனைவர் ஆர். சிவனேசன் மற்றும் பேராசிரியர்கள், அலுவலகப் பணியாளர்கள் ஆகியோர்களைக் கல்லூரி தலைவரும் தக்கலை மறைமாவட்ட ஆயருமான மேதகு ஆயர் மார் ஜார்ஜ் ராஜேந்திரன் SDB, தக்கலை மறைமாவட்ட குருகுல முதல்வரும், கல்லூரி மேலாளருமான தோமஸ் பவத்துப்பறம்பில், கல்லூரி தாளாளர் மற்றும் செயலர் பேரருட்தந்தை ஆன்றனி ஜோஸ், கல்லூரி இணை தாளாளர் மற்றும் கல்வி இயக்குனர் அருட்தந்தை முனைவர் மைக்கேல் ஆரோக்கியசாமி ஆகியோர் பாராட்டினர்.

பேரருட்தந்தை ஆன்றனி ஜோஸ்
தாளாளர்

# அருட்சகோதரர்களிடமிருந்து

***"பின்னர் மரியா நான் ஆண்டவரின் அடிமை உம் சொற்படியே எனக்கு நிகழட்டும் என்றார்." லூக்கா. 1:38***

அனைத்து குருமடங்களிலும் ஜெபமாலை மாத கொண்டாட்டம் சிறப்பாக நடைபெற்றது. ஆடம்பரமான ஜெபமாலை பவனி மற்றும் சிறப்பு ஜெபங்கள் நடைபெற்றன. அருட்சகோதரர்களுக்கு இது ஒரு மகிழ்ச்சியான மற்றும் ஜெபத்தினுடைய புதிய அனுபவமாக அமைந்தது. நமது சகோதரர்கள் அனைவருக்கும் அக்டோபர் மாதம் செமஸ்டர் தேர்வுகள் நடைபெற்றது. நாங்கள் எங்கள் தேர்வுகளை வெற்றிகரமாக நிறைவுசெய்தோம். நீங்கள் எங்களுக்காக ஜெபித்தீர்கள் என நாங்கள் உறுதியாக நம்புகிறோம். எங்களது மனமார்ந்த நன்றியை உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறோம். பெரும்பாலான அருட்சகோதரர்களுக்கு தேர்வு முடிந்து விடுமுறை கிடைத்தது. அவர்கள் குடும்பத்துடன் தங்கள் விடுமுறையை மகிழ்ச்சியாக அனுபவித்தார்கள்.

திருத்தொண்டர்கள் அஜின், லிஜு, பிரின்ஸ், அருட்சகோதரர் அமன்டோ, பூந்தமல்லி இறையியல் மற்றும் ரூஹாலயா தத்துவயியல் சகோதரர்கள் இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் மிஷன் கள அனுபவத்திற்காக சென்றிருந்தார்கள். அவர்கள் இந்தியாவின் வளமான கலாச்சாரம் மற்றும் பாரம்பரியங்களை அனுபவித்தனர். சகோ ஜுபினும் சகோ ஆல்வினும் ரோமில் நலமாக உள்ளனர். அவர்களுக்கு வகுப்புகள் நன்றாக நடைபெற்று வருகிறது. அவர்களுக்கான கல்வியாண்டின் அதிகாரப்பூர்வ அறிமுக விழா இந்த மாதம் நடைபெற்றது. தக்கலையில் இருந்து உரோமையில் படிக்கின்ற மற்றும் பணியாற்றுகின்ற அருட் தந்தையர்கள்,



அருட்சகோதரிகள் மற்றும் சகோதரர்கள் அனைவரும் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களை சந்தித்தனர்.

ஆலுவா டோன் போஸ்கோ குருமடத்தில் community day விழா கொண்டாடப்பட்டது. சகோ. அபிஷ்வின் ஒரு அணியின் தலைவராக இருந்தார். Community day இன் பகுதியாக அவர்கள் குடும்பஜெபம், ஜெப சேவை, விளக்கொளியில் உணவு, பிரமாண்டமான கைப்பந்து போட்டி போன்ற பல செயல்பாடுகளைக் கொண்டிருந்தனர். அக்டோபர் 22 மற்றும் 23 ஆகிய தேதிகளில் சகோ. ஜான் முக்கிய பங்கு வகித்த 'சாட்சி' என்ற பெயரில் ஒரு நாடகத்தை அரங்கேற்றினர். திருத்தொண்டர்கள் அஜின், லிஜு, பிரின்ஸ், ஜார்ஜ்குட்டி அவர்களின் pastoral course மற்றும் அவர்களின் குருமட பயிற்சிகளை வெற்றிகரமாக நிறைவு செய்து, நமது மறைமாவட்டத்தில் தங்கள் திருதொண்டு பணியை செய்யப் போகிறார்கள். நமது மறைமாவட்டத்தில் அவர்களின் வெற்றிக்காகவும் பயனுள்ள இறைபணிக்காவும் செபிக்கக் கேட்டுக் கொள்கிறோம்.

சகோ. ஆண்டனி தகிடியேல்

# வரவிருக்கும் நிகழ்வுகள்

அருட்பணி பேரவை கூட்டம், சங்கமம் – நவம்பர் 01

மறைமாவட்ட தினம் கொண்டாட்டம் – நவம்பர் 13

LSDP பொன்விழா, பெருஞ்சிலம்பு – நவம்பர் 16

முதல் நித்திய வார்த்தைப்பாடு, காரோடு – நவம்பர் 19

முதியோர் இல்ல மந்திரிப்பு, மூலமற்றம் – நவம்பர் 23

மறைமாவட்ட மாமன்ற கருத்தமர்வு, சங்கமம் – நவம்பர் 26

# மறைமாவட்டச் செய்திகள்

## பொன்விழா கொண்டாட்டம் – பிலாங்காலை

பிலாங்காலை புனித குழந்தை தெரசாள் மறைவட்ட ஆலயத்தின் பொன்விழா கொண்டாட்டம் 2022 அக்டோபர் 01 அன்று நடைபெற்றது. மாலை 3.30 மணிக்கு பொன்விழாவையொட்டி புதிதாக நிறுவப்பட்ட கற்சிலுவை மறைமாவட்ட குருகுல முதல்வர் பேரருட்தந்தை தோமஸ் பவ்வத்துபறம்பில் அவர்களால் மந்திரிக்கப்பட்டது. பின்னர் திருவனந்தபுரம் CMI மாகாண தலைவர் பேரருட்தந்தை செபஸ்டின் சாமத்தற CMI அவர்கள் தலைமையில் பொன்விழா நன்றி திருப்பலி நடைபெற்றது.

## வாழ்க்கை வழிகாட்டி முகாம் - படந்தாலுமூடு

மறைக்கல்வி மாணவர்களுக்காக இருநாள் பயிற்சி முகாம் "உம் வார்த்தைபடியே எனக்கு ஆகட்டும்" என்ற தலைப்பில் 2022 அக்டோபர் 03 மற்றும் 04 ஆகிய தேதிகளில் படந்தாலுமூடு திருஇருதய மறைவட்ட ஆலய வளாகத்தில் நடைபெற்றது. இதில் பல்வேறு பங்குகளை சேர்ந்த 191 மாணவ, மாணவியர் பங்கேற்றனர். தக்கலை மறைமாவட்ட SMYM இளையோர்கள் வழிநடத்தினர். அருட்தந்தை அபிலாஷ் மற்றும் மறைவட்ட பொறுப்பாளர்கள் இதற்கான ஏற்பாடுகளை சிறப்பாக செய்திருந்தனர்.

## Educare தியானம் – கல்லுவிளை

Educare மாணவர்களுக்கான நான்குநாள் தியானம் கல்லுவிளை KKSSS வளாகத்தில் 2022 அக்டோபர் 02 முதல் 05 வரை நடைபெற்றது. அருட்தந்தை டேனியல் VC தலைமைலான குழு இதை வழிநடத்தினர். 50 க்கும் மேற்பட்ட மாணவர்கள் இதில் கலந்துகொண்டனர். அருட்தந்தை எபி இதற்கான முயற்சிகளை சிறப்பாக செய்திருந்தார்.

## மார் மாத்யூ காவுகாட் நினைவு தினம்

கன்னியாகுமரி மாவட்டத்தில் இறைபணியாற்றிய சங்கனாச்சேரி மறைமாவட்ட முதல் ஆயர் மார் மாத்யூ காவுகாட் அவர்களின் நினைவு தினம் அக்டோபர் 08 அன்று கொண்டாடப்பட்டது

ஆயரின் கல்லறையில் காலை 10.30 மணியளவில் மறைமாவட்ட ஆவணக்காப்பாளர் பேரருட்தந்தை ஜோஷி குளத்துங்கல் அவர்கள் தலைமையில் திருப்பலியும் அதைத்தொடர்ந்து இறந்தோருக்கான நினைவு செபம் நடைபெற்றது.

### குருக்களுக்கான கூட்டம்

மறைமாவட்ட அருட்தந்தையர்களுக்கான கூட்டம் அக்டோபர் 09 ஆம் தேதி மாலை 5.00 மணிக்கு தக்கலை சங்கமத்தில் வைத்து நடைபெற்றது. இதில் முக்கியமாக மிஷன் லீக் இயக்கத்தின் பவளவிழா கொண்டாட்டம் பற்றி விவாதிக்கப்பட்டது.

### அருட்தந்தையர்களுக்கான வருடாந்திர தியானம்

தக்கலை மறைமாவட்ட அருட்தந்தையர்களுக்கான வருடாந்திர தியானம் அக்டோபர் 09 முதல் 14 வரை தக்கலை சங்கமத்தில் வைத்து நடைபெற்றது. அருட்தந்தை டேனியல் பூவண்ணதில் இத்தியானத்தை வழிநடத்தினார்.

### அருட்சகோதரிகளுக்கான ஒருநாள் தியானம்

தக்கலை மறைமாவட்டத்தில் பணியாற்றுகின்ற அருட்கன்னியர்களுக்கான ஒருநாள் தியானம் 2022 அக்டோபர் 14 அன்று காலை 9.00 மணிக்கு கல்லுவிளை புனித அன்னைத்தெரசாள் ஆலயத்தில் நடைபெற்றது. அருட்தந்தை டேனியல் பூவண்ணதில் வழிநடத்தினார். இறுதியில் அருட்தந்தை எபி அவர்கள் திருப்பலி நிறைவேற்றினார்.

### சிறுமலர் பவளவிழா எழுச்சிப்பயணம்

உலகளாவிய சிறுமலர் மிஷன் லீக் இயக்கத்தின் பவளவிழா கொண்டாட்டத்தின் நிறைவுவிழா நிகழ்ச்சிகள் 29 ஜனவரி 2023 அன்று நமது மறைமாவட்டத்தில் நடைபெற உள்ளது. பவளவிழாவை முன்னிட்டு 2022 அக்டோபர் 16 முதல் அனைத்து மறைவட்டங்களிலும் எழுச்சிப்பயணம் நடைபெற்று வருகிறது. மறைவட்ட இயக்குநர்கள் இந்நிகழ்வை ஒருங்கிணைத்து வருகின்றனர்.

### சுயநிதி பள்ளிகளின் தலைமையாசிரியர்கள் மற்றும் தாளாளர்களுக்கான கூட்டம்

சுயநிதிப் பள்ளிகளின் தலைமையாசிரியர்கள் மற்றும் தாளாளர்களுக்கான கூட்டம் 18 அக்டோபர் 2022 அன்று மதியம் 02.30 மணிக்கு சங்கமத்தில் நடைபெற்றது. கூட்டத்தில் 13 பள்ளிகளைச் சேர்ந்த 18 உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். பள்ளிகளின் தற்போதைய நிலை மற்றும் எதிர்கொள்ள வேண்டிய சவால்கள் குறித்து பங்கேற்பாளர்கள் பகிர்ந்து கொண்டனர்.

### மறைமாவட்ட துறை இயக்குநர்/தலைவருக்கான கூட்டம்

தக்கலை மறைமாவட்டத்தில் செயல்பட்டு வரும் பல்வேறு துறைகளின் இயக்குநர்களின் கூட்டம் 2022 அக்டோபர் 19 மற்றும் 20 தேதிகளில் தக்கலை ஆயர் இல்லத்தில் நடைபெற்றது. குருகுல முதல்வர் பேரருட்தந்தை தோமஸ் பவத்துபறம்பில், இயக்குநர்களை நேரில் சந்தித்து ஒவ்வொரு துறையின் செயல்பாடுகளையும் மதிப்பீடு செய்து, அதை வலுப்படுத்த தேவையான வழிகாட்டுதல்களை வழங்கினார். கூட்டத்தில் இயக்குநர்கள் தங்கள் துறைகளின் ஆண்டுத் திட்டத்தை சமர்ப்பித்தனர்

### ஜெபமாலை பவனி மற்றும் ஜூபிலி கண்காட்சி – தென்காசி

தென்காசி மறைபரப்புதள ஜெபமாலை பவனி மற்றும் ஜூபிலி கண்காட்சி 2022 அக்டோபர் 23 அன்று நடத்தப்பட்டது. புளியரை புனித குழந்தை தெரசாள் ஆலயத்தில் மதியம் 02.30 மணியளவில் குருகுல முதல்வர் பேரருட்தந்தை தோமஸ் பவத்துபறம்பில் மிஷன் ஞாயிறு நினைவாக மிஷன் லீக் கொடியை ஏற்றி வைத்தார். அருட்சகோதரி லிபியா CMC ஜெபம் செய்தார். அதைத் தொடர்ந்து பூலரி மெட்ரிக் பள்ளி நோக்கி ஜெபமாலை பவனி நடைபெற்றது. அருட்தந்தை தோமஸ் தக்கலை இந்நிகழ்வை சிறப்பாக ஒருங்கிணைத்திருந்தார்.

### லிட்டில் பிளவர் ஹேண்டிகிராப்ட் யூனிட் – மஞ்சாலுமூடு

திறன் பயிற்சி மையத்தின் கீழ், லிட்டில் பிளவர் ஹேண்டிகிராப்ட் யூனிட் என்ற புதிய பிரிவு, 2022 அக்டோபர் 25 அன்று

மஞ்சாலுமூடு புனித குழந்தை தெரசாள் மறைவட்ட ஆலய வளாகத்தில் காலை 10.30 மணிக்கு தொடங்கப்பட்டது. அருட்தந்தை ஜோஷி குளத்தும்கல் அவர்கள் தொடக்கி வைத்தார். அருட்தந்தை அகஸ்டின் தலோடில் இதற்கான முயற்சிகளை சிறப்பாக செய்திருந்தார்.

- **சீனாய் உள்ளிருப்பு தியானம் – சங்கமம்**

சீனாய் தியான இல்லத்தின் நான்கு நாள் தியானம் 2022 அக்டோபர் 27 முதல் 30 வரை தக்கலை சங்கமத்தில் நடைபெற்றது. 27ஆம் தேதி வியாழன் மாலையில் திருப்பலியுடன் ஆரம்பமானது. அருட்தந்தை அகஸ்டின் மேனம்காரியில் VC. தியானத்தை வழிநடத்தினார். இதில் விருதுநகர் மறைபரப்பு தளம் உட்பட தக்கலை மறைமாவட்டத்தை சார்ந்த 23 இறைமக்கள் கலந்து கொண்டனர்.

---

# *மறை மாவட்ட புலம்பெயர்ந்தோர் திருத்தொண்டு பணிக்குழு*

## மாதாவின் ஜெபமாலை மாத வணக்கக் கூட்டம்

அக்டோபர் மாதமான மாதாவின் ஜெபமாலை ஜெப கூட்டம் 28.10.2022 அன்று இரவு 7 மணிக்கு இயக்குனர் அருள்தந்தை சுமேஷ் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. தந்தை அவர்கள் அனைவரையும் அன்போடு வரவேற்றார்கள். மறை மாவட்ட குருகுல முதல்வர் பேரருட்தந்தை தோமஸ் பவத்துபறம்பில் அவர்கள் ஜெபமாலையின் தொடக்க ஜெபம் சொல்லி ஜெப வழிபாட்டை தொடங்கி வைத்தார்கள். ஒவ்வொருவரும் ஒவ்வொரு ஜெப கருத்துக்களை முன்வைத்து ஒவ்வொரு தேவ ரகசியங்களை சொல்லி ஜெபித்தார்கள். நிறைவாக மறை மாவட்ட பாசமிகு ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் அவர்கள் அமெரிக்கா - சிக்காகோ மாகாணத்திலிருந்து இந்நிழல் கூட்டத்தில் பங்கெடுத்து நிறைவுரையாற்றி அனைவரையும் ஆசீர்வதித்தார்கள். ஒருங்கிணைப்பாளர் திரு எட்வின்சன் அனைவருக்கும் நன்றி கூறினார். இதில் சுமார் 23 நபர்கள் பங்கெடுத்து இறையாசீர் பெற்றுச் சென்றனர். இயக்குனர் அருட்தந்தை சுமேஷ் கூட்டத்தை சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தார்.

# மறைவட்டச் செய்திகள்

## படந்தாலுமூடு

### திரு இருதய மறைவட்ட ஆலயம் – படந்தாலுமூடு

8.10.2022 அன்று மறைக்கல்வி மாணவர்களுக்கான ஒருநாள் கருத்தரங்கு காலை 9 மணி முதல் மாலை 3.30 மணி வரை நடைபெற்றது திரு. வில்சன் மற்றும் திருமதி ஜெயராணி அவர்கள் மாணவர்களுக்கான வகுப்புகளை எடுத்தார்கள்.

16.10.2022 அன்று மிஷன் லீக் இயக்கத்தின் பவளவிழாவின் துவக்க விழாவானது அருட்தந்தை மகேஷ் அவர்களின் முன்னிலையில் ஞாயிறு திருப்பலிக்குப் பின் பேரருட்தந்தை சத்தியநேசன் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டது.

செபமாலை மாதத்தை முன்னிட்டு 24.10.2022 முதல் 30.10.2022 வரை மாலை 6 மணிக்குத் திருப்பலியும் அதைத் தொடர்ந்து ஜெபமாலையும் நடைபெற்றது. 30.10.2022 அன்று மாலை 6.40 மணிக்கு ஆடம்பர ஜெபமாலை பவனி நடைபெற்றது ஜெபமாலை பவனிக்குப் பின் சிற்றுண்டி வழங்கப்பட்டது

### புனித மரியகொரற்றி ஆலயம் – அதங்கோடு

01.10.2022அன்று புனித குழந்தை தெரசாவின் திருவிழா கொண்டாடப்பட்டது.

07.10.2022 மாதத்தின் முதல் வெள்ளி அன்று மாலை 6.30 மணிக்குத் திருப்பலியும் அதைத் தொடர்ந்து நற்கருணை ஆராதனையும் நடைபெற்றது.

17.10.2022 முதல் 27.10.2022 வரை மாலை 6.30 மணிக்கு திருப்பலியும் அதைத் தொடர்ந்து ஜெபமாலை பவனியும் நடைபெற்றது.

30.10.2022 அன்று மாலை 6.30 மணிக்கு ஜெபமாலை பவனியும் அதைத் தொடர்ந்து நற்கருணை ஆசீர்வாதமும் நடைபெற்றது

### புனித சூசையப்பர் ஆலயம் – வளன்நகர்

ஜெபமாலை மாதத்தை முன்னிட்டு அக்டோபர் 1 முதல் 31 வரை எல்லா நாட்களிலும் குருசடியில் வைத்து செபமாலையும் நவநாளும் நடைபெற்றது. இறுதிநாள் சகோதரர் வென்சஸ்லாசஸ் அவர்கள் மாதாவைப் பற்றி நற்செய்தி பகிர்வை நடத்தினார்.

### புனித மத்தேயு ஆலயம் – அண்ணிக்கரை

3.10.2022 முதல் 9.10.2022 வரை ஆலயத் திருவிழாவானது

நடைபெற்றது. முதல் நாள் மாலை 6.30 மணிக்கு பங்குதந்தை சுமேஷ் அவர்களால் திருக்கொடியேற்றப்பட்டது. திருவிழாவின் ஒவ்வொரு நாளும் ஜெபமாலையும் அதைத் தொடர்ந்து திருப்பலியும் நடைபெற்றது. அனைத்து பக்த இயக்கங்களின் ஆண்டு விழாவானது சிறப்பான முறையில் கொண்டாடப்பட்டது.

ஜெபமாலை மாதத்தை முன்னிட்டு அக்டோபர் 1 முதல் 31 வரை எல்லா நாட்களிலும் மாலை 5 மணிக்குத் திருப்பலியும் அதைத் தொடர்ந்து ஜெபமாலையும் நடைபெற்றது. 31.10.2022 அன்று மாலை 5.30 மணிக்குத் திருப்பலியும் அதைத்தொடர்ந்து ஜெபமாலை பவனியும் நடைபெற்றது.

### புனித புவுல் ஆலயம் – தெற்றியோடு

தெற்றியோடு புனித பவுல் ஆலய மக்கள் ஒன்றிணைந்து 04.10.2022 அன்று ஒரு நாள் புனிதப்பயணமாக, இடத்துவா, பரணங்ஙானம் ஆகிய புனிதத் தலங்களுக்குச் சென்றனர்.

அக்டோபர் 17 ஆம் தேதி, புனித குழந்தைத் தெராசின் திருநாளைச் சிறப்பிக்கும் விதமாக, மறைக்கல்வி மன்றம் மற்றும் மிஷன் லீக் உறுப்பினர்கள் சேர்ந்து, புனிதைப் பற்றிய கலைநிகழ்வுகளை ஒரு மணி நேரம் நடத்தினர்.

செபமாலை மாதத்தை முன்னிட்டு அக்டோபர் மாதம் முழுவதும் மாலை 6 மணிக்கு கெபியில் வைத்து செபமாலை செபிக்கப்பட்டது. 30 ஆம் தேதி ஞாயிறு மாலை 4.30 மணிக்கு உறவியங்களிலிருந்து மக்கள் செபமாலை செபித்து பவனியாக ஆலயம் வந்தடைந்தனர். இறுதியில் நவநாளும் இறுதி ஆசியும் இருந்தது. அனைவருக்கும் இனிப்பு வழங்கப்பட்டது.

## மஞ்சாலுமூடு

### புனித குழந்தை தெரசாள் மறைவட்ட ஆலயம் – மஞ்சாலுமூடு

மஞ்சாலுமூடு புனித குழந்தை தெரசாள் ஆலய திருவிழா 02.10.2022 முதல் 09.10.2022 வரை நடைபெற்றது. 2.10.2022 அன்று மாலை 4.15 மணியளவில் ஜெபமாலை, நவநாளை தொடர்ந்து திரு கொடியேற்றுதல் பின்பு விண்ணில் பிறந்தோர் நினைவு திருப்பலி நடைபெற்றது. 03.10.2022 முதல் 05.10.2022 வரை ஜெபமாலை, நவநாள், திருப்பலியை தொடர்ந்து நற்செய்தி பெருவிழா நடைபெற்றது. 06.10.2022 அன்று மறைக்கல்வி மற்றும் பக்தசங்கங்களின் ஆண்டுவிழா நடைபெற்றது. 08.10.2022 அன்று ஜெபமலை நவநாள் திருப்பலியை தொடர்ந்து திருவிழா பவனி நடைபெற்றது 09.10.2022 அன்று காலை

9.30 மணியளவில் காலை ஜெபம் நவநாளை தொடர்ந்து ராசா திருப்பலி நடைபெற்றது. அன்று மாலை 6.30 அளவில் ஜெபமாலை தொடர்ந்து திருக்கொடி இறக்குதல் நடைபெற்றது. தொடர்ந்து புனித தேவசகாயம் நாடகம் நடைபெற்றது. பின்பு திருவிழா இனிதே நிறைவு பெற்றது.

## தக்கலை–பிலாங்காலை

### புனித குழந்தை தெரசாள் மறைவட்ட ஆலயம் – பிலாங்காலை

பிலாங்காலை புனித குழந்தை தெரசாள் மறைவட்ட ஆலயத்தில் செப்டம்பர் மாதம் 30ம் தேதி முதல் அக்டோபர் மாதம் 9ம் தேதி வரை ஆலயத்திருவிழா மிகச் சிறப்பாக கொண்டாடப்பட்டது. அக்டோபர் மாதம் 10ம் தேதி இறந்தவருக்கான சிறப்பு திருப்பலி நடைபெற்றது. அக்டோபர் மாதம் 1-ம் தேதி பங்கின் பொன்விழா, CMI மலர் நிலையம் மற்றும் புனித ஜோசப் தொடக்கப்பள்ளியின் பொன்விழாவும் அத்தோடு பங்குதந்தை அவர்களின் குருத்துவ அருட்பொழிவின் 25 ஆண்டு வெள்ளி விழாவும் சீரும் சிறப்புமாக கொண்டாடப்பட்டது. அன்றைய நாள் புதிய கல்லறை தோட்டம் மற்றும் புதிய கல்குருசு நம் மறைமாவட்ட குருகுல முதவர் பேரருட்தத்தை தோமஸ் பௌவத்துபறம்பில் அவர்களால் அர்ச்சிக்கபட்டது அன்றைய தினம் திருவனந்தபுரம் மாகான தலைவர் பேரருட்தந்தை செபாஸ்டின் சாமத்தறா திருப்பலியில் முன்னிலை வகித்தார்கள் அவருடன் இணைந்து பங்கின் முன்னாள் பங்கு தந்தையர்கள் மற்றும் குருகுல முதல்வர் ஆகியோர் திருப்பலியை சிறப்பித்தார்கள். திருப்பலி முடிந்தவுடன் பொன்விழா சிறப்பு கூட்டம் நடைபெற்றது. 8 ம் தேதி சிறப்பு தேர்பவனி நடைபெற்றது. 10 ம் திருவிழாவின் மாலையில் மறைக்கல்வி ஆண்டுவிழா நடைபெற்றது. இந்நிகழ்ச்சிகளை பங்குதந்தை மற்றும் பங்கு பேரவை உறுப்பினர்கள் முன்னின்று நடத்தினர்.

அக்டோபர் மாதம் 16 ம் தேதி மிஷன்லீக்கின் பவளவிழாவையொட்டி எழுச்சிப்பயணம் காட்டத்துறை பங்கிலிருந்து கொண்டுவரப்பட்டு ஆலயத்தில் சிறப்பு ஜெபம் செய்யப்பட்டது. அக்டோபர் ஜெபமாலை மாதத்தை முன்னிட்டு அக்டோபர் 21 முதல் 31 வரை மாலை 6 மணிக்கு திருப்பலி மற்றும் ஜெபமாலை நடைபெற்றது. அக்டோபர் மாதம் 30 ம் தேதி வின்சென்ட் தே பவுல் இயக்கத்தின் விவிலிய ஒளிச்சுடர் சேனங்கோடு பங்கிலிருந்து கொண்டு வரப்பட்டு ஒருவாரம் சிறப்பு ஜெபம் நடைபெற்றது

### புனித ஜார்ஜியர் ஆலயம் ஆனையடி

அக்டோபர் 30 ம் தியதி சிறுமலர் மிஷன் லீக்கின் பவள

விழாவையொட்டிய எழுச்சி பயணமானது கைசாலவிளை பங்கிலிருந்து கொண்டு வரப்பட்டு ஆலயத்தில் ஒரு வாரம் வைத்து சிறப்பு செபம் நடைப்பெற்றது. அக்டோபர் மாதம் ஜெபமாலை மாதம் முதல் 2 வாரங்கள் அருட்சகோதரிகள் அனைத்து வீடுகளுக்கும் சென்று ஜெபமாலை ஜெபிக்க ஒத்துழைத்தார்கள்.தொடர்ந்து 3 வது வாரம் அருட்கன்னியர்கள் இல்லத்தில் வைத்து ஜெபமாலை நடைபெற்றது. இறுதி வாரம் அக்டோபர் 24 முதல் 31 வரை ஆலயத்தில் ஜெபமாலை, திருப்பலி நடைபெற்றது. மக்கள் யாவரும் மாதாவிடம் அதிக பக்தியை வெளிப்படுத்தும் விதமாக அனைத்து நிகழ்வுகளிலும் பங்கு பெற்றார்கள்.

### புனித சவேரியார் ஆலயம் கைசாலவிளை

ஜெபமாலை மாதத்தை முன்னிட்டு அக்டோபர் மாதம் 21 முதல் 31 வரை மாலையில் சிறப்பு திருப்பலி மற்றும் ஜெபமாலை நடைபெற்றது. சிறுமலர் மிஷன் லீக்கின் எழுச்சி பயணம் 23 ம் தியதி ஆலயத்திற்கு கொண்டு வரப்பட்டு ஒரு வாரம் சிறப்பு செபம் நடைபெற்றது.

## களியல்

### புனித சூசையப்பர் ஆலயம் – காரோடு

காரோடு புனித சூசையப்பர் ஆலயத்தில் ஜெபமாலை மாதத்தை முன்னிட்டு உறவியம் வழியாக தினமும் வீடுகளில் ஜெபமாலை நடைபெற்றது. எல்லாபுதன்கிழமைகளிலும் ஆலயத்தில் நற்கருணை ஆராதனை மற்றும் ஜெபமாலை நடைபெற்று வருகிறது. 9ஆம் தேதி ஞாயிற்றுகிழமை புனித வின்சென்ட்-தே-பவுல் சபையின் சிறப்பு நாளாகக் கொண்டாடப்பட்டது ஜெபமாலை மாத்தின் கடைசி நாளகிய அக்டோபர் 31 திங்கட்கிழமை மாலை 6 மணிக்கு திருப்பலியும், ஆடம்பர ஜெபமாலைப்பவனியும் நடைபெற்றது.

## சூசைபுரம்

### தேவமாதா ஆலயம் – கிள்ளியூர்

***ஆலயத்திருவிழா***

திருவிழாவுக்கு ஆயத்தமாக 29.08.2022 முதல் 01.09.2022 வரை சகோ. டேவிட் (சென்னை) அவர்களால் நற்செய்தி பெருவிழா நடைபெற்றது.

02.09.2022 வெள்ளிக்கிழமை முதல் 12.09.2022 திங்கள்கிழமை வரை ஆலயத்திருவிழா மிகவும் கோலாகலமாக கொண்டாடப்பட்டது. அனைத்து நாட்களிலும் நவநாள், ஜெபமாலை மற்றும் திருப்பலி ஆடம்பர முறையில் நடைபெற்றது. 09.09.2022 அன்று ஆடம்பர மாதாதேர்பவனி பங்கின் அனைத்து வீடுகளுக்கும்

எடுத்துச்செல்லப்பட்டது. *11.09.2022* அன்று குருகுல முதல்வர் பேரருட்தந்தை தோமஸ் பௌவ்வத்துபறம்பில் அவரகளால் ராசா திருப்பலி நிறைவேற்றப்பட்டது. அதன்பின்னர் சிங்காரி மேளத்துடன் ஆலயத்தை சுற்றி மாதா பவனி நடைபெற்றது.

***ஜெபமாலை பவனி***

*01.10.2022* முதல் *31.10.2022* வரை குருசடியில் ஜெபமாலை நடைபெற்றது, *21.10.2022* முதல் *31.10.2022* வரை மாலை *6* மணிக்கு திருப்பலியும், தொடர்ந்து ஜெபமாலை பவனியும் நவநாள் ஜெபமும் நடைபெற்றது.

*31.10.2022* அன்று ஆடம்பர திருப்பலியும் ஜெபமாலையும் நற்கருணை ஆசீர்வாதமும் நடைபெற்றது. இறுதியில் மரியாயின் சேனை உறுப்பினர்கள் இணைந்து அன்பின் விருந்து வழங்கினார்கள். எல்லா புதன் கிழமைகளிலும் ஆடம்பர ஜெபமாலை பவனி நடைபெற்று வருகிறது.



*24.10.2022* திங்கள்கிழமை அன்று மாலை *3* மணி முதல் *6* மணி வரை சிறப்பு நற்கருணை ஆராதனை அருட்தந்தை சாஜன் நெட்டபொங்கு அவர்கள் தலைமையில் நடைபெற்றது. மாதத்தில் அனைத்து வெள்ளிக்கிழமைகளிலும் நற்கருணை ஆராதனை நடைபெற்று வருகிறது.

*08.10.2022* சனிக்கிழமை மாலை *6* மணிக்கு மறைக்கல்வி ஆசிரியர்களின் கூட்டம் பங்குதந்தை தலைமையில் நடைபெற்றது.

***மரியாயின் சேனை கூட்டம்***

*02.10.2022* ஞாயிற்றுக்கிழமை மாலை *5.30* மணிக்கு பங்குதந்தை தலைமையில் மரியாயின் சேனை கூட்டம் ஆரம்பமானது. பல வருடங்களாக நடைபெறமால் இருந்த இக்கூட்டத்தை பங்குதந்தை ஜெபமாலை சொல்லி தொடக்கி வைத்தார். பின்னர் மாதவின் சிறப்பையும் மரியாயின் சேனை பற்றியும் சிறப்பாக எடுத்துரைத்தார். அனைத்து மக்களும் இக்கூட்டத்தில் பங்கெடுக்க வேண்டும் என்ற நோக்கத்தில் தொடர்ந்து எல்லா புதன்கிழமைகளிலும் மாலை திருப்பலிக்கு பின் கூட்டம் நடைபெற்று வருகிறது.

*19.10.2022* அன்று மரியாயின் சேனை கூட்டத்தை பார்வையிட தக்கலை மறைமாவட்ட துணைத்தலைவர் சகோ. பன்னீர்செல்வம் வருகை

புரிந்து, கூட்டத்தைபற்றி விளக்கி கூறினார்.

### புனித வியாகப்பர் ஆலயம் - மாங்கரை

*01.10.2022* முதல் ஜெபமாலை மாதத்தை முன்னிட்டு உறவியம் வாயிலாக எல்லா வீடுகளிலும் ஜெபமாலை நடைபெற்றது. அக்டோபர் *01* ம் தேதி மறைக்கல்வி மாணவர்களுக்கு ஒருநாள் சுற்றுலா நடைபெற்றது.

அக்டோபர் *03* முதல் அக்டோபர் *20* வரை இளையோர் இயக்கம் சார்பாக இளையோர்களின் வீடுகளில் தினமும் மாலை ஜெபமாலை ஜெபிக்கப்பட்டது.

அருட்தந்தை பிரின்ஸ் மாலியில் அவர்களின் பிரிவு உபச்சார விழா அக்டோபர் *09* காலை திருப்பலிக்கு பின் நடைபெற்றது, அன்றைய நாள் மாலை *3.00* மணிக்கு அருட்தந்தை ஜோகேஷ் அவர்கள் பங்குதந்தையாக பொறுப்பேற்றார். அன்றையதினம் மாலை *6.00* மணிக்கு கரியங்குளத்துவிளை உறவிய ஆண்டுவிழா நடைபெற்றது.

*21.10.2022* முதல் *31.10.2022* தினமும் மாலை *5.45* மணிக்கு குருசடியில் ஜெபமாலை பவனி ஆரம்பித்து ஆலயத்தில் நிறைவுபெற்றது.

*30.10.2022* ஞாயிற்றுக்கிழமை மதியம் *2.30* மணிக்கு அருட்தந்தை ஜோகேஷ் தலைமையில் பங்குபேரவை கூட்டம் நடைபெற்றது.

*31.10.2022* திங்கள்கிழமை ஜெபமாலை மாதத்தின் கடைசிநாள் ஜெபமாலை மற்றும் ஆடம்பர திருப்பலி நடைபெற்றது. முடிவில் அனைவருக்கும் இனிப்பு வழங்கப்பட்டது.

### கிறிஸ்து அரசர் ஆலயம் – பாலப்பள்ளம்

***பாப்புலர் மிஷன் தியானம்.***

*15* ஆண்டுகளுக்கு ஒருமுறை மட்டுமே பங்குகளில் நடைபெறும் பாப்புலர் மிஷன் தியானமானது பாலப்பள்ளம் கிறிஸ்து அரசர் ஆலயத்தில் அக்டோபர் *2* முதல் *7* ஆம் தேதி வரை இயக்குனர் அருட்தந்தை எட்வர்ட் மற்றும் துணை இயக்குனர் அருட்தந்தை லிஜோ ஆகியோர் தலைமையில் நடைபெற்றது. பங்குத்தந்தை அருள்தந்தை ஜான்பால் அவர்கள் மேற்பார்வையில் நடைபெற்ற இத்தியானத்தில் திருப்பலி, ஒப்புரவு வழிபாடு, வீடு சந்திப்பு, நற்கருணை கொண்டாட்டம் ஆகியவை நடைபெற்றது. இறுதி நாளில் பாலப்பள்ளம் சந்திப்பு முதல் அனைவரும் சிலுவை ஏந்திய சிறந்தொரு பவனி நடைபெற்றது. நிறைவு விழாவில் தக்கலை மறை மாவட்ட குருகுல முதல்வர் பேரருட்தந்தை தோமஸ் பௌவத்துப்பறம்பில் அவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள். திருவழிபாடுகளுக்கான ஏற்பாடுகளை SABS துறவற சபை சகோதரிகள் சிறப்பாக செய்தனர். இறுதியில் தியான தலைவர் திரு எட்வின்சன் அனைவர்க்கும் நன்றி கூறினார். பங்குத்தந்தை,

தலைவர் மற்றும் துணை தலைவி திருமதி கஸ்தூரி ஆகியோர் பங்கு கைக்கார்களோடு இணைந்து இதற்கான ஏற்பாடுகளை செய்தனர். ஜெபமாலை வணக்கத்தையொட்டி அக்டோபர் 7 முதல் 31 ஆம் தேதி வரை தினசரி மாலை 5:30 மணிக்கு ஆலய கெபியில் வைத்து ஜெபமாலை மன்றாட்டு நடைபெற்றது. சிறப்பு வேண்டுதல்கள் மற்றும் பரிந்துரைகள் ஏறெடுக்கபட்டது.

***40 மணி நேர ஆராதனை***

அக்டோபர் 19ஆம் தேதி காலை நான்கு மணிக்கு திருப்பலியுடன் 40 மணிநேர ஆராதனை SABS துறவற சபை கன்னியர் இல்ல சிற்றாலயத்தில் வைத்து தொடங்கியது. தொடர்ந்து பங்கு மக்கள் குடும்பமாகவும் குழுவாகவும் முழு நேர ஆராதனையிலும் பங்கேற்றனர். 20 ஆம் தேதி மாலை 7 மணிக்கு கான்வெண்டில் இருந்து நற்கருணை பவனியாக ஆலயம் வந்து திருப்பலி ஒப்பு கொடுக்கப்பட்டு 40 மணி நேர ஆராதனை நிறைவு பெற்றது. அக்டோபர் 23ஆம் நாள் பங்குத்தந்தை அருட்தந்தை ஜான்பால் அவர்களின் பெயர் கொண்ட திருநாள் சிறப்புற கொண்டாடப்பட்டது. புனித ஜான்பால் அவர்கள் வாழ்வு குறித்த நிகழ்ச்சிகள் நடைபெற்றது. அன்றைய தினம் பங்கு பேரவை கூட்டம் நடைபெற்றது. இவ்வாண்டு பங்கு பாதுகாவலர் திருவிழா நவம்பர் 11 ஆம் தேதி முதல் 20 ஆம் தேதி வரை நடத்த தீர்மானிக்கப்பட்டது. அதற்கு செயல்பாட்டு குழுவினர் தெரிவு செய்யப்பட்டனர். மறை மாவட்ட அளவில் அக்டோபர் 23ஆம் நாள் நடைபெற்ற ஜெபமாலைப்பவனி எம் பங்கிலிருந்து தொடங்கப்பட்டது. பவனியில் எம் பங்கின் சார்பில் பெரிய ஜெபமாலை உருவாக்கப்பட்டு மரியாவின் சேனை உறுப்பினர்கள் தலைமையில் பவனியாக சூசைபுரம் கொண்டு செல்லப்பட்டது. அக்டோபர் 30ஆம் தேதி காலையில் திருப்பலியை தொடர்ந்து மறைமாவட்ட மிஷன் லீக் பொன்விழா பேழைக்கு வரவேற்பு கொடுக்கப்பட்டது. மதியம் 2 மணிக்கு திருவிழாவை முன்னிட்டு நடத்தப்படும் விவிலிய எழுத்துப்போட்டி நடத்தப்பட்டது.

## நித்திரவிளை

### புனித ஜார்ஜியார் திருத்தலம் – முஞ்சிறை

புனித குழந்தை தெரசா திருநாளைக் கொண்டாடும் விதமாக 2.10.2022 அன்று மிஷன் லீக் உறுப்பினர்களுக்கான சிறப்புத்திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு அவர்களுக்காக ஜெபிக்கப்பட்டது. பின்னர் மாணவர்கள் ஒன்று சேர்ந்து உறுதிமொழி எடுத்து பல்வேறு கலை நிகழ்ச்சிகளுடன் சிறப்பித்தனர்.

5ஆம் தேதி புனித குழந்தை தெரசா உறவியத்தின் ஆண்டுவிழா கொண்டாடப்பட்டது. உறவிய மக்கள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

அக்டோபர் மாதம் ஜெபமாலை அன்னையின் மீது கொண்ட பக்தியை வெளிப்படுத்தும் மாதம் இதனைச் சிறப்பிக்கும் விதமாக எல்லா உறவியங்களிலும் மக்கள் ஒவ்வொரு உறவியமாகச் சென்று ஜெபமாலை சொல்லி ஜெபித்தனர் அப்போது அன்னையின் திருவுருவம் மற்றும் மெழுகுதிரி கரங்களில் ஏந்தி செபித்து அன்னையின் பக்தியை எடுத்துரைத்தனர்.

அதன் தொடர்ச்சியாக 31ம் தேதி காலை 6.30 மணிக்குத் திருப்பலியுடன் 12 மணி நேர தொடர் ஜெபமாலை வழிபாடு நடைபெற்றது. ஒவ்வொரு உறவியமும் 2 மணி நேரம் ஜெபமாலை சொல்லி ஜெபித்தனர். இறுதியாக அருட்தந்தை மிஜோ அவர்கள் தலைமையில் சிறப்பு தியானமும் நற்கருணை ஆசீர் வழிபாடும் பவனியும் நடைபெற்றது. செபமாலையின் சிறப்பு பற்றிய மையச் சிந்தனையில் தியானம் அமைந்தது. அனைத்து இறைமக்களும் கலந்து கொண்டு அன்னை வழியாக அருள் பெற்று இல்லம் சென்றனர். இறுதியில் அனைவருக்கும் அன்பின் விருந்து பரிமாறப்பட்டது.

### புனித அந்தோணியார் ஆலயம் – வயலங்கரை

அக்டோபர் மாதம் முழுவதும் மரியாயின் சேனை சார்பில் மாலை 6.30 மணிக்கு ஜெபமாலை நடத்தப்பட்டது. 24ஆம் தேதி முதல் 31 முடிய 7 நாட்கள் ஜெபமாலைப்பவனி நடைபெற்றது. 9ஆம் தேதி வின்சென்ட்-தே-பவுல் சபையின் சிறப்பு நாளாகக் கொண்டாடப்பட்டது அதற்கு ஆயத்தமாக வீடு வீடாகச் சென்று Bucket காணிக்கை சேகரித்து கிடைத்த தொகையை 9 ஆம் தேதி பெருஞ்சிலம்பு மாணவர் இல்லம் சென்று அவர்களை சந்தித்து ஒருசிறு தொகையை வழங்கி ஜெபித்து மகிழ்ந்தனர்.

23ஆம் தேதி மறைக்கல்வி மாணவர்களுக்கான கலைப்போட்டிகள் பங்களவில் நடைபெற்றது. 30-ஆம் தேதி வின்செந்தியர்களுக்கான 3 மணி முதல் 4 மணி வரை தியானமும் பாவசங்கீர்த்தன வழிபாடும் நடைபெற்றது. ஆன்மீகத்தில் அவர்கள் அதிகம் வளர இத்தியானம் உதவியது. மேலும் மாதர்ஜோதிஸ் தாய்மார்களின் கூடுகை நடைபெற்றது. 31ம் தேதி மாலை ஆடம்பர திருப்பலியும் பவனியும் ஆடம்பரமாக நடைபெற்றது. பங்குமக்கள் அனைவரும் இத்திரு நிகழ்வுகளில் பக்தியுடன் பங்குபெற்று இறையாசீர் பெற்றனர்.

**தகவல் சேகரிப்பு: திருமதி சினேக லதா | திருமதி ஹேமா | திருமதி செலின் மேரி | திருமதி ஷீலா, திருமதி, ஷைலா | மெரின் சுஜித்**

## இதர செய்திகள்

- அருட்தந்தை ஆன்றணி மாடபுரக்கல் அக்டோபர் 21 அன்று திருவல்லா பிலிவர்ஸ் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை மேற்கொண்டுள்ளார்.
- திருத்தொண்டர் ஜார்ஜ்குட்டி தனது படிப்பை முடித்து தற்போது சூசைபுரம் புனித சூசையப்பர் மறைவட்ட ஆலயத்தில் இறைபணியை செய்துவருகிறார். திருத்தொண்டர்கள் அஜின், லிஜூ, பிரின்ஸ் இறையியல் படிப்பை முடித்து நவம்பர் மாதம் மறைமாவட்டத்துக்கு திரும்புவார்கள்.
- வாறுதட்டு ஆலயத்தில் மூன்று வருடங்களாக பணியாற்றிய அருட்சகோதரி லீமா ரோஸ் SD (74), 2022 அக்டோபர் 25 அன்று நித்திய ஓய்விற்கு அழைக்கப்பட்டார். அக்டோபர் 27 அன்று செத்திபுழா SD மாகாண இல்லத்தில் நடைபெற்ற இறுதிச்சடங்குகளில் மறைமாவட்ட குருகுல முதல்வர் பேரருட்தந்தை தோமஸ் பவத்துபறம்பில் அவர்கள் கலந்து கொண்டார்.
- அருட்தந்தை.ஜோஸி புத்தன்புரையில் தனது விடுமுறை முடித்து அக்டோபர் 30 அன்று மீண்டும் ஜெர்மனி சென்றுவிட்டார்.
- அருட்தந்தை பிரின்ஸ் மாலியில் வெளிநாட்டு பணிக்காக அக்டோபர் 31 அன்று அயர்லாந்து சென்றுள்ளார்.

| BIRTHDAY OF REV. FATHERS- NOVEMBER - 2022 | |
|---|---|
| Fr. Martin Kandamparampil MST | 02 |
| Fr. Babu Thattil CMI | 15 |
| Fr. Abilash Xavier Raj S | 16 |
| Fr. Akhil Karikkathara CMI | 18 |
| Fr. John Thekkel | 20 |

| MONTHLY AGENDA – NOVEMBER 2022 | | | |
|---|---|---|---|
| **DATE** | **DAY** | **TIME** | **EVENTS** |
| 1 | Tue | 09.30 am<br>09.00 am<br>10.00 am | Pastoral Council Meeting at Sangamam<br>Youth one day training at Kalluvilai<br>KKSSS Golden Jubilee drawing competition for Safe a Family |
| 2 | Wed | | Aided schools: visiting charitable institutions |
| 5 | Sat | 09.30 am | Dance Fest at Kalluviali by Family Apostolate |
| 6 | Sun | 02.30 pm | Diocese level Bible Fest writing competition at Padanthalumoodu<br>SMYM : Unit visit at Karode & Pallikonam<br>Sirumalar Ezhuchipatyanam at Bengiri, Kattathurai, Thakkalivilai, Kazhuvan-thittai, Karode & Anamukham. |
| 10 | Thu | 10.00 am | 'Varnam': inter school poster and painting competition at Kalluvilai |
| 11 | Fri | | Night Vigil at Sinai Retreat Centre, Kalluvilai |
| 12 | Sat | 10.00 am<br>02.30 pm | KKSSS: Golden Jubilee dance & group song competition for SHG<br>Kuzhanthai Isso Iyakkam animators' meet at Kalluvilai |
| 13 | Sun | 03.00 pm | Diocesan day celebration at Padanthalumoodu<br>SirumalarEzhuchipatyanam at Kalluvilai, Kudukkachivilai, Kunnuvilai, Vayalinkarai, Mukkoottukal, Marappady & Mezhacodu. |
| 16 | Wed | 10.00 am | Golden Jubilee celebration of Providence Home, Perumchilambu. |

| | | | |
|---|---|---|---|
| 19 | Sat | | Last date to submit the list of Bible Fest 2022-23<br>Last date to submit the project report of STD XII |
| | | 10.00 am | FCC: Vestion& First Profession at Karode |
| 20 | Sun | 06.00 pm | Online Mission Quest<br>SMYM: Unit visit at Kulasekaram & Chenamcode<br>Aided schools : Career guidance programme<br>SirumalarEzhuchipatyanam at Paraicode, Mankarai, Palugal, Varuthattu, Thettivilai, Pallikonam & Netta. |
| 21 | Mon | 10.00 am | Curia Meeting |
| 22 | Tue | 09.30 am | Priests' Conference |
| 23 | Wed | 03.00 pm | Blessing of Old Age Home at Moolamat-tam |
| 24 | Thu | 10.00 am | Seminar on Eparchial Assembly at Sangamam<br>One day convention at Kalluvilai |
| 27 | Sun | 01.30 pm | SMYM: Kaliyal Forane gathering<br>SMYM: Unit visit at Marapady & Kaliyal<br>SirumalarEzhuchipatyanam at Thucka-lay, Mathapuram, Athencode & Muzhu-code. |

From the Eparchial Chancery

## BISHOP'S ENGAGEMENTS NOVEMBER 2022

| DATE | DAY | TIME | EVENTS |
|---|---|---|---|
| 1 - 12 | | | USA VISIT |
| 13 | Sun | 05.00 am<br>03.00 pm | >> Thuckalay<br>Padanthalumoodu: Diocesan Day Holy Qurbana and celebration |
| 14 | Mon | | Engaged |
| 15 | Tue | | Engaged |
| 16 | Tue | 10.00 am | Perumchilampu: Golden Jubilee Holy Qurban |
| 17 | Wed | | Bishop's House |
| 18 | Fri | 06.00 pm | Christurajapuram: Feast Day Holy Qurbana |
| 19 | Sat | 09.00 am | Karode: FCC First profession Holy Qurbana |
| 20 | Sun | 08.30 am | Christ the King, Palapallam Feast day Holy Qurbana |
| 21 | Mon | 10.00 am | Curia Meeting |
| 22 | | 09.30 am | Sangamam: Priest Conference |
| 23 | | 03.00 pm | Moolamattam: Blessing of Old age home |
| 24 | Thu | 05.00 pm | Plankalai: Silver Jubilee of Fr Thomas Thekkethala CMI |
| 25 | Fri | 10.00 am | Padanthalumoodu: Blessing of Jyothi Center Social service center |
| 26 | Sat | 05.00 pm | Padanthalumoodu: SH School, Annual day celebration |
| 27 | Sun | 07.00 am | Pilankalai: Golden Jubilee Holy Qurbana |
| 28 | Mon | | Bishop's House |
| 29 | Tue | 10.00 am | Benefactors Visit from Changanaserry<br>Vadakamkumal: Marriage Holy Qurbana |
| 30 | Wed | | Benefactors Visit |

Rev. Fr. Robin Jose, Bishop's Secretary



POPULAR MISSION RETREAT, PALAPALLAM,
2-7.10.2022



MATHAR JYOTHIS, LEADERS' MEET
KALLUVILAI, 24.10.2022



KUZHANDAI ISO, FORANE SEMINARS
6-8.10.2022



MISSION LEAGUE PLATINUM JUBILEE 'EZHUCHI PAYANAM,' PADANTHALUMOODU, 16.10.2022



VINCENT DE PAUL, 'A DAY WITH THE NATION,' CLEANING, UTHIRAMCODE, 01.10.2022



GOLDEN JUBILEE CONCLUSION, PILANKALAI, 01.10.2022

For Private Circulation Only

IRAI ARUL, The Official Organ of the Diocese of Thuckalay

Published by: Fr. Joseph Santhosh for the Diocese of Thuckalay,

Bishop's House, Post Box No. 12, Thuckalay - 629175

Printed at: Pulari Offset Press, Thuckalay 629175, Ph. 04651-252570